உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

அக்டோபர்–2024




# காசி இராமேஸ்வரம்

## புண்ணிய ஸ்தல சிறப்பிதழ்

மதுரகாளியம்மன் துணை

# நடந்ததை மறந்திடுங்கள். நடப்பதை நினைத்திடுங்கள், நடக்கப்போவதை அறிந்திடுங்கள்

**ஆம், குரு பார்க்க மாட்டாரா? சனி கருணை காட்டமாட்டாரா?**
**ராகு நற்பலனை கொடுப்பாரா? கேது கேடுகளை தடுப்பாரா?**
**சுக்கிரன் அள்ளித்தரமாட்டரா? சூரியன் ஒளிவீச மாட்டாரா? சந்திரன் சகலமும் அளிப்பாரா?**

என இன்றைய சமூகம் ஒருவித குழப்பநிலையில் சுழன்று கொண்டிருக்கின்றது, ஜாதகங்களை எடுத்துக்கொண்டு தம் வாழ்க்கையில் சாதகங்கள் கிடைத்திடாதா என கோவில் கோவிலாக அலைந்து கொண்டிருப்பதை தினமும் கண்கூடாக காணமுடிகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலைகள்? ஆம், 9-இல் குரு வரமாட்டாரா? நல்ல வரன் அமையுமா? வேலை கிடைக்குமா? சம்பள உயர்வு வருமா? குழந்தை பாக்கியம் உண்டா? லாட்டரியில் காசுமழை கொட்டுமா? ராசிக்கு ஏத்த மாதிரி பெயரை மாத்தலாமா? இல்ல ஊரைவிட்டே கிளம்பலாமான்னு பல குழப்ப நிலையில், நிலை தடுமாறிகிட்டு, தானும் குழம்பிகிட்டு பிறரையும் குழப்பிக்கொண்டிருக்கின்றது சமூகம்.

குரு பார்க்க கோடி நன்மை? கோளறு பதிகத்தை படித்தால் கோள்களால் நன்மை? நவக்கிரகத்தை வலம்வந்தால் நாளும் நன்மை? என பொதுவான பலன்களையே கேட்டு வந்துள்ளோம்.

**எத்தனையோ ஜோதிடர்களை பார்த்தும், எத்தனையோ டிவி சேனல்களை பார்த்தும். வாழ்க்கையில் மாற்றமில்லையா? விடிவு பிறக்கவில்லையா? அனைவருமே பொதுப்பலன்களையே சொல்லி வரும் வேளையில், உங்கள் சுயஜாதக பலன்களை துல்லியமாக அறிந்திட ஓர் அற்புதமான வாய்ப்பு**

## கவலைவேண்டாம்..! இனிமுதல் உங்கள் வாழ்வில் விடியலே..! உங்கள் வாழ்க்கையை உச்சம்தொட வைக்க வந்துவிட்டார்

**ஜோதிஷ் ப்ரவீன, ஜோதிஷ் விஷர்த, ஜோதிஷ் சாஸ்த்ரி, ஜோதிஷ் ஆச்சார்ய, ஜோதிஷ் வாசஸ்பதி டாக்டர்**

## ஆஸ்ட்ரோ ஆச்சார்யா V S ஹரி ஹர சுதன், P.hd.,

குரு அருளே திருஅருள் என்ற திருவாய்மொழிகேற்ப, குழந்தை பருவத்திலிருந்தே பாரம்பரிய ஜோதிட ஆஸ்தான கலை குடும்பத்தில் பிறந்து, கடந்த 20 ஆண்டிற்கும் மேலாக சாஸ்த்ரிய, தத்துவயியல் மூலம் ஜோதிட கலையில் தேர்ச்சிபெற்று பல்லாயிரக்கணக்கானவர்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார் ஜோதிஷ் ப்ரவீன, ஜோதிஷ் விஷர்த, ஜோதிஷ் சாஸ்த்ரி, ஜோதிஷ் ஆச்சார்ய, ஜோதிஷ் வாசஸ்பதி டாக்டர் **V.S. ஹரி ஹர சுதன்**. இவர் நான்கு தலைமுறைகளாக ஜோதிட பாரம்பரியத்தில் கொடிகட்டி பறந்த, நாடி வந்தோருக்கு நல்வழிகாட்டிய ஆன்மீக செம்மல் வேம்பத்தூர் மகாதேவ ஐயரின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்மீக உலகில் இதுபோல் அற்புதங்களை நிகழ்த்துவோர் சிலரே. அரிதிலும் அரிது தன்னலம் பாராது பிறர்நலம் காண்போரை காண்பது. தான் கற்ற கல்வியால் பல நிறுவனங்களில் பல பதவிகளை வகித்து வந்தாலும், சமூகம் எனும் நிறுவனத்தை திருத்தியமைக்க தன்னாலான பங்களிப்பை அளித்திட, தன்னையே தியாகம் செய்திட்ட இவரது பணி மகத்தானது. கோடியில் ஒருவருக்கே இவ்வரிய கொடுப்பினை கிடைக்கும். கிடைத்துள்ளது நம் சமூகத்திற்கே பெருமைக்குரியது.



**தங்களது சுயஜாதகத்தை அன்னாருக்கு அனுப்பி அற்புதமான பலன்களை பெறலாம். வாழ்விலும் ஏற்றம்பெறலாம்.**


ஜோதிடர் **V.S.Hari hara sudan, P.hd.,**

No.:2 Raghava Lakshmy Apartments, Raghavan street,
Bhavani Nagar, Ayapakkam, Chennai - 600077.

+91 7339175496 sudancool2001@gmail.com


aanmeegamalar.com







# காசியை சுற்றியுள்ள 56-வித விநாயகர்

காசியை திவோதாஸ் என்ற மிகவும் பக்தியும் ஆன்மீகமும் கொண்ட மன்னன் ஆட்சி செய்தான். அவருடைய ராஜ்ஜியத்தில் ஒவ்வொருவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள், எல்லா இடங்களிலும் செழிப்பு இருந்தது. அந்த மன்னன் கடும் தவம் இருந்து, தான் ஆட்சி செய்யும் வரை, தேவர்களும் கடவுள்களும் காசியை விட்டு விலகி இருக்க வேண்டும் என்று வரம் பெற்றான்.

பிரம்மதேவன் ஒரு நிபந்தனையின் பேரில் திவோதாஸ் கேட்ட வரத்தை கொடுத்தார்.

"மன்னன் தன்னை ஒரு சிறந்த மற்றும் திறமையான நிர்வாகியாக நிரூபிக்க வேண்டும், காசியில் வசிக்கும் அல்லது காசிக்கு வரும் மக்கள் அனைவரும் தங்கள் ஆன்மீக விஷயங் களில் நன்றாக நடத்தப்பட வேண்டும்" என்று நிபந்தனை வித்தித்தார் பிரம்மா. அதற்கு சம்மதித்த மன்னன் அதற்கேற்ப சிறப்பான ஆட்சியை அளித்தான்.

பிரம்ம தேவன் கொடுத்த வரத்திற்கு கட்டுப்பட்ட சிவ பெருமான் காசியைவிட்டு மந்தாராச்சலத்தில் வசித்து வந்தார். நீண்ட நாட்களாக காசியை விட்டு விலகியிருந்ததால் மிகவும் வருத்தமடைந்தார் சிவபெருமான்.

சிவனின் வருத்தத்தை போக்க தேவர்கள், சூரியன், மோகினி, சிவகணங்கள் முயற்சி செய்தும், காசியின் அழகில் மயங்கி அவைகள் அங்கேயே தங்கி விட்டன.

கடைசியாக விநாயகப் பெருமான் மன்னனிடம் சென்று, மன்னரை அறியாமல் செய்யும் தவறை சுட்டிக்காட்டி மீண்டும் காசியில் சிவபெருமான் குடியேற வழிவகை செய்தார்.

தன் தந்தையன் விருப்பத்தை நிறைவேற்றிய தனயன் என்பதால் காசியைச் சுற்றி விநாயகருக்கு 56 விநாயகர் சன்னதிகள் உருவாகின.

அந்த விநாயகர் சன்னதிகளைப் பற்றி பார்ப்போம்.

அர்க்க விநாயகர், துர்க்க விநாயகர், பீம்சண்டி விநாயகர், தெஹ்லி விநாயகர், உத்தண்ட விநாயகர், பாஸ் பாணி விநாயகர், கர்வ விநாயகர், சித்தி விநாயகர், விகட த்விஜ விநாயகர், ராஜ புத்திர விநாயகர், பிரணவ விநாயகர், வக்ர துண்ட விநாயகர், ஏக தந்த விநாயகர்,

த்ரி முக விநாயகர், பஞ்சாஸ்ய விநாயகர், ஹேரம்ப விநாயகர், விக்ன ராஜ விநாயகர், வரத விநாயகர், மோதக ப்ரிய விநாயகர், லம்போதர விநாயகர், கூட் தந்த விநாயகர் ஷால் கண்ட விநாயகர், கூஷ்மாண்ட விநாயகர், முண்ட விநாயகர், சிங் துண்ட விநாயகர், கூணி தாக்ஷ விநாயகர், க்ஷிப்ர பிரசாத் விநாயகர், சிந்தாமணி விநாயகர், தந்த ஹஸ்த விநாயகர், பிச்சண்டில் விநாயகர்

உத்தண்ட முண்ட விநாயகர், ஸ்தூல தந்த விநாயகர், கலி பிரிய விநாயகர், சதுர் தந்த விநாயகர், த்வி மக விநாயகர், ஜ்யேஷ்ட விநாயகர், கஜ விநாயகர், கால விநாயகர், நாகேஷ் விநாயகர்

மணிகர்ணிகா விநாயகர், ஆஷா விநாயகர், சிருஷ்டி விநாயகர், யக்ஷ விநாயகர், கஜ கர்ண விநாயகர், சித்ர கண்ட விநாயகர், மித்ர விநாயகர், மோத விநாயகர், பிரமோத விநாயகர், சுமுக விநாயகர் மற்றும் துர்முக விநாயகர், கண நாத விநாயகர், ஞான விநாயகர், த்வார விநாயகர், அவி முக்த விநாயகர்.

அவி முக்த விநாயகர், பக்தர்களின் அனைத்து கஷ்டங்களையும் நீக்குகிறார். சில மூத்த பண்டிதர்களின் கூற்றுபடி, அவி முக்த விநாயகர் சிலை ஞான வாபி மசூதியின் சுவரில் இருந்ததாகவும் ஆனால், இங்கு தரிசனம் செய்வதற்கு அனுமதி இல்லை என்றும் கூறப்படுகிறது.

டுண்டி விநாயகரைத் தவிர, மேலே குறிப்பிடப்பட்ட இடங்களில் ஐம்பத்தாறு விநாயகர்கள் உள்ளனர். மேற்கூறியவை தவிர, சில பக்தர்கள் மற்ற விநாயகர் சிலைகளை நிறுவியிருக்கலாம், அவையும் வழிபடப்படுகின்றன.

காசியில் “சப்பன் விநாயக யாத்ரா என்பது விநாயகரின் ஐம்பத்தாறு வழிபாட்டுத் தலங்களை தரிசிக்க மேற்கொள்ளப்படுகிறது. இந்த யாத்திரைக்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகலாம்.





# காசி-ராமேஸ்வரம் யாத்திரை செல்வது எப்படி?

இந்துவாக பிறந்த ஒவ்வொருவரது ஆசையும் வாழ்நாளில் ஒருதடவையாவது காசி யாத்திரை செல்வது தான். காசியாத்திரை என்பது காசிக்கு மட்டும் செல்வது கிடையாது. காசியுடன் ராமேஸ்வரமும் செல்வது தான். அப்படியானால் காசிராமேஸ்வரம் யாத்திரை செல்வது எப்படி? என்பதை காண்போம்:

காசி யாத்திரை செல்ல விரும்புபவர்கள் முதலில் ராமேஸ்வரம் சென்று அங்குள்ள அக்னி தீர்த்தமாகிய கடலில் நீராடி ஈர உடையுடன் கடலில் மூன்று தடவை மூழ்கி எழ வேண்டும்.

ஒவ்வொரு தடவை மூழ்கும் போதும் ஒவ்வொரு பிடி மணல் எடுக்க வேண்டும். முதல் தடவை மூழ்கி எடுக்கும் மணலை சேது மாதவ என்று கூறி லிங்கமாக பிடித்தும், இரண்டாவது தடவை மூழ்கி எடுக்கும் மணலை பிந்து மாதவ என்று கூறி லிங்கமாக பிடித்தும், மூன்றாவது தடவை மூழ்கி எடுக்கும் மணலை வேணு மாதவ என்று கூறி லிங்கமாக பிடித்தும், கரையில் வைக்க வேண்டும்.

பின்னர் மூன்று லிங்கத்திற்கும் விபூதி சந்தனம் குங்குமம் இட்டு, வில்வ இலை போட்டு ஓம் நம சிவாய என்ற பஞ்சாட்சர மந்திரம் கூறி வாழைப்பழம் வெற்றிலை பாக்கு நைவேத்தியம் வைத்து, பின் சூட தீபாராதனை காட்டி கும்பிட வேண்டும்.

பின் சேது மாதவ லிங்கத்தை மட்டும் எடுத்து பத்திரமாக நாம் வைத்து கொள்ள வேண்டும்.

பிந்து மாதவ மற்றும் வேணு மாதவ லிங்கம் இரண்டையும் கடலில் போட்டு விட வேண்டும். அதன் பின் ராமநாதர் கோயிலுக்குள் உள்ள 22 தீர்த்தங்களில்

1.மகாலட்சுமி தீர்த்தம்: செல்வவளம், 2.சாவித்திரி தீர்த்தம்: பேச்சுத்திறன், 3.காயத்ரி தீர்த்தம்: உலகத்துக்கே நன்மை 4. சரஸ்வதி தீர்த்தம்: கல்வி அபிவிருத்தி, 5.சங்கு தீர்த்தம்: வாழ்க்கை வசதி அதிகரிப்பு, 6. சக்கர தீர்த்தம்: மனஉறுதி பெறுதல் 7. சேது மாதவ தீர்த்தம்: தடைபட்ட பணிகள் சுலபமாக முடிதல். 8. நள தீர்த்தம், 9. நீல தீர்த்தம், 10.கவய தீர்த்தம், 11.கவாட்ச தீர்த்தம், 12. கந்தமாதன தீர்த்தம்: எத்துறையிலும் வல்லுனர் ஆகுதல்.13. பிரம்மஹத்தி விமோசன தீர்த்தம், 14. கங்கா தீர்த்தம், 15. யமுனை தீர்த்தம், 16. கயா தீர்த்தம், 17: சர்வ தீர்த்தம்: எப்பிறவியிலும் செய்த பாவங்கள்நீங்குதல் 18. சிவ தீர்த்தம்: சகல பீடைகளும் ஒழிதல் 19. சத்யாமிர்த தீர்த்தம்: ஆயுள் விருத்தி 20. சந்திர தீர்த்தம்: கலையார்வம் பெருகுதல் 21. சூரிய தீர்த்தம்: முதன்மை ஸ்தானம் அடைதல் 22. கோடி தீர்த்தம்: முக்தி (மறுபிறவி இல்லாத நிலை) நீராடி விட்டு கோடி தீர்த்த்தை மட்டும் ஒரு கேனில் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்

அதன் பின் ஈர உடையை மாற்றி கொண்டு ராமநாதர் மற்றும் பர்வதவர்த்தினி அம்மனுக்கு மாலை சாற்றி அர்ச்சனை செய்ய வேண்டும். பின் இறைவனை வழிபட்டு காசிக்கு கிளம்ப வேண்டும்.

உடனே காசிக்கு செல்ல இயலாதவர்கள் தம்முடன் வைத்திருக்கும் சேது மாதவ லிங்கத்தையும், கோடி தீர்த்தத்தையும் பூஜை அறையில் வைத்து காசி செல்லும் வரை பூஜை செய்ய வேண்டும். காசி செல்லும் போது மறக்காமல் சேது மாதவ லிங்கத்தையும், கோடி தீரத்த்தையும் எடுத்து செல்ல வேண்டும். காசி செல்பவர்கள் முதலில் அலகாபாத் சென்று அங்கு சேது மாதவ லிங்கத்தை திரிவேணி சங்கமத்தில் இட வேண்டும்.

பின் அங்கிருந்து ஒரு கேனில் தீர்த்தம் எடுத்து கொள்ள வேண்டும். பின் காசி சென்று அங்குள்ள விஸ்வ

aanmeegamalar.com




நாதருக்கு ராமேஸ்வரத்தில் இருந்து எடுத்து சென்ற கோடி தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து வணங்க வேண்டும். பின்னர் தங்களுக்கு பிடித்த ஏதாவது ஒரு உணவு பொருளை விட்டு விட வேண்டும்.

பின்னர் கயா சென்று அங்கு நமது இறந்த மூதாதையருக்கு பித்ருக்கடன் செய்தும், மோட்ச தீபம் ஏற்றியும் வழிபட வேண்டும். இதனால் இறந்த மூதாதையரின் பரிபூரண ஆசி நமக்கும் நமது சந்ததியினருக்கும் கிடைக்கும்.

அதன் பின் ராமேஸ்வரம் வர வேண்டும். உடனே ராமேஸ்வரம் வர இயலாதவர்கள் 15 நாட்களுக்குள் ராமேஸ்வரம் செல்ல வேண்டும்.

அது வரை அலகாபாத்தில் எடுத்த தீர்த்தத்தை பூஜை அறையில் வைத்து வணங்க வேண்டும். ராமேஸ்வரம் செல்லும் போது அலகாபாத்தில் எடுத்த தீர்த்தத்தை ராமேஸ்வரம் ராமநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு காசி ராமேஸ்வர யாத்திரையை நிறைவு செய்ய வேண்டும்

இப்படி செய்தால் தான் காசி ராமேஸ்வர யாத்திரையின் முழுபலனும் கிடைக்கும்


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம், ஓடு வியாபாரம் & சாமில்

சீனியப்பா குரூப்ஸ்






SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

சீனியப்பா லாட்ஜ் A/C

SAK திருமண ஹால்








172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,

9842868256



எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.

# தீபாவளியன்று தங்ககாசு, வெள்ளிக்காசை பிரசாதமாக தரும்





# மகாலட்சுமி ஆலயம்

aanmeegamalar.com

வட இந்தியாவில் தீபாவளி பண்டிகை ஐந்து அல்லது ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது. மத்தியபிரதேச மாநிலத்தில், "மால்வா பகுதியில் ரத்லாம் மாவட்டத்தில் ரத்லாம் நகரின் மத்தியில் அமைந்துள்ள லக்ஷ்மன்புரா பகுதியில் மானக் சௌக் " என்ற இடத்தில் அமைந் துள்ளது ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோயில்

இந்த பகுதி இந்தியாவில் 24 கேரட், தங்க வணிகத்திற்கு பெயர் பெற்ற ஊர் ஆகும். தங்கமும்" நவரத்தினமும் பிரபலமாக இருக்கும் இந்த நகரை ரத்தினபுரி என்றும் அழைக்கிறார்கள்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு. இரண்டு நாட்களுக்கு முன்பாகவே இங்கு தீபாவளி கொண்டாட்டம் தொடங்கி விடுகிறது.

முதல்நாளில் அதாவது துவாதசி நாளில் பசுவையும், கன்றையும் வழிபடும் விழா நடை பெறுகிறது. இதனை நந்தினி விரதம் என்று கொண்டாடுகிறார்கள்!

இரண்டாம் நாளில் மூன்றாம் நாளில் தன்வந்திரி ஜயந்தி என்று கொண்டாடுகிறார்கள்!...

தீபாவளி நாளை நரக சதுர்த்தி "என்று. கொண் டாடுகிறார்கள். நான்காம் நாளில் கேதார கௌரி விரதம் என்றும் ஸ்ரீமஹாலக்ஷ்மி பூஜை நாள் என்றும் கொண்டாடுகிறார்கள்.

ஐந்தாம் நாளில் கோவர்த்தன பூஜை என்று கொண்டாடுகிறார்கள்.

ஆறாம் நாளில் யமத்துவிதியை என்றும். பையா தூஜ் என்றும் கொண்டாடுகிறார்கள்!.

இப்படி தீபாவளியை லக்ஷ்மி குபேர பூஜை என்று கூறி குபேரனையும் ஸ்ரீ மகாலக்ஷ்மியையும் ஒன்றாக வழிபட்டு வளம் பெற வாழ்கிறார்கள்.

நாடு முழுவதும் கோயில்களில் பிரசாதமாக திருநீறு குங்குமம் மஞ்சள் சந்தனம் மலர்கள் வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார்கள்.

ஆனால்!! இங்குள்ள.. ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோயிலில் மட்டும்.. தீபாவளி நாளில் தரிசனம் செய்ய கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கம் வெள்ளி நாணயங்களை பிரசாதமாக வழங்குகிறார்கள்!!

பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய தங்க, வெள்ளி ஆபரணத்தின் ஒரு பகுதியை தீபாவளி நாளில் பக்தர்களுக்கு, பிரசாதம் என்று கோயில் நிர் வாகம் வழங்கி வருகிறது!

இது தவிர இன்னம் ஒரு அதியசமும் இந்த கோயிலில் நடைமுறையில் உள்ளது. அதாவது தீபாவளிக்கு முன் பாகவே பக்தர்கள் தங்கள் வீடுகளில் உள்ள தங்கம், வைரம், வெள்ளி ஆபரணங்களை கோயிலில் கொண்டு கொடுத்து இன்னன்ன பொருள்கள் கொடுத்துள்ளோம் என ரசீது பெற்று கொள்கிறார்கள்! அதனை கோயில் நிர்வாகம் பெற்று பாதுகாப்பாக அவரவர் பெயர் பதித்து... அந்த ஆபர ணங்களை கொண்டு ஸ்ரீ மஹா லக்ஷ்மியை தீபாவளி நாளில் அலங்கரிக்கிறார்கள்.

தீபாவளி அன்று கோயில் முழுவதும் தங்கம், வெள்ளி, ஆபர ணங்கள் அலங்கரிக்கிறது. இது தவிர கோயில் முகப்பு முதல் கருவறை வரை ரூபாய் நோட்டுக்களை கொண்டு தோரணம் கட்டப்படுகிறது.

இப்படி தீபாவளி நாளில் சுவாமிக்கு அலங்காரம் செய்து முடித்து பின்னர். பக்தர்கள் சுவாமிக்கு அலங்காரம் செய்ய கொடுத்த தங்களின் ஆபரணங்களை ரசீதை காட்டி திரும்ப பெற்று கொள்கிறார்கள். இப்படி சுவாமி அலங்காரத்திற்கு கொடுத்து திருப்பி வாங்கி வீட்டில் வைத்தால் வீட்டில் செல்வம் பெருகும் என்று. பக்தர்கள் நம்புகிறார்கள்.

தீபாவளி நாளில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி யின் இந்த அலங்கார. காட்சியை ஸ்ரீ மஹாலக்ஷ்மி தர்பார் என்றும் குபேர தர்பார் என்றும் கூறுகிறார்கள்

ரத்லாம் பேருந்து நிலயத்திருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கோயில் உள்ளது நாட்டிலேயே தங்கம் பிரசாதமாக வழங்கும் ஒரே கோயில் இது தான்.






இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



# ஸ்ரீ பேச்சி அம்மன்

## டிரான்ஸ் போர்ட் & டிரேடர்ஸ்
## சேம்பர் பிரிக்ஸ் & ரியல் எஸ்டேட்

எங்களிடம் உயர்தரமான
அளவில் பெரிய சேம்பர்
செங்கல் கிடைக்கும்
வீடு கட்டுவதற்கு தேவையான
பொருள்கள் அனைத்தும் கிடைக்கும்






உரிமையாளர் **எம்.கந்தசாமி**
கிடாக்குழி (இருப்பு மதுரை)
செல் 9843789337 9487059737

அலுவலக முகவரி
பிளாட் 1&2 செல்வபுரம் மெயின்ரோடு, குகன் பள்ளி
அருகில், தெப்பக்குளம், மதுரை-626009



சேம்பர் முகவரி
கிருங்கா கோட்டை முத்தனேந்தல் அருகில்
மதுரை-ராமேஸ்வரம் பை-பாஸ் ரோடு மானாமதுரை

aanmeegamalar.com

# மகிமைகள் நிறைந்த... திருச்செந்தூர் முருகன்

aanmeegamalar.com

திருச்செந்தூர் போர் நடந்த இடம் ஆதலால், செந்திலாண்டவன் கோயில் அருகில் உள்ள கடல் நீர் சற்றே சிவந்து ரத்த நிறமாயிருக்கிறது.

மாமரமாக மாறிய சூரபத்மனை வேலாயுதத்தால் முருகப் பெருமான் இரண்டாகப் பிளந்தார். அதன் ஒரு பகுதி சேவலாகவும், மற்றொன்று மயிலாகவும் மாறியது. அதனால் இங்கு மாமரங்கள் வளர்வதில்லை.

இங்குள்ள சண்டிகேஸ்வரருக்கு புதிய மாலைகளை சாத்த மாட்டார்கள். மூலவருக்கு சாத்திக் கழித்த மாலையையே சண்டிகேஸ்வரருக்கு அணிவிக்கிறார்கள்.

மூலவர் சந்நிதி இரவில் அடைக்கப்பட்டதும் இங்கு அமைந்துள்ள பைரவர் சந்நிதியில் சாவியை வைக்கிறார்கள். இவரது சந்நிதியில் உள்ள விளக்கில் இருந்து வேறொரு விளக்கில் அக்னியை ஏற்றிச் சென்றுதான் மடைப்பள்ளி அடுப்பைப் பற்ற வைக்கிறார்கள். இரவில் இவருக்கு வடை நைவேத்தியம் செய்யப்படுகிறது.

'இங்கிருந்து நீவிர் அருள்பாலிக்கும் வரை கடலால் கோயிலுக்குத் தீங்கு நேராது!' என்பது வருண பகவானின் சத்திய வாக்கு. சுனாமி தமிழ்நாட்டைத் தாக்கியபோது திருச்செந்தூருக்கு எந்த அபாயமும் ஏற்படவில்லை என்பதே இதற்குச் சான்று.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரி ஒருவர் 59 காசுகளுள்ள தங்கக் காசு மாலையை முருகனுக்கு அளித்துள்ளார். 100 அமெரிக்கன் டாலர்களால் செய்யப்பெற்ற காசு மாலையும் உள்ளது. சிறப்பு நாட்களில் மட்டுமே இந்த ஆபரணங்களை முருகனுக்கு அணிவிக்கிறார்கள்.

ஸ்ரீசண்முகரின் உயரத்துக்கு ஏற்ற வைர வேல் ஒன்று இங்குள்ளது. இது 100 பவுன் தங்கம், 40 காரட் வைரம் ஆகியவற்றால் செய்யப்பட்டது. நடுவில் பெரிய பச்சைக் கல் கொண் டது. கி.பி.1917ல் கொத்த மங்கல் சி.ராம்ஜி குடும்பத்தாரால் அர்ப்பணிக்கப் பட்டது.

திருச்செந்தூர் முருகனுக்கு அமுது படைக்கும்போது கீழே விழும் பருக்கைகளை எடுக்க தங்க ஊசி ஒன்று பயன்படுத்தப்படுகிறது. கும்பாபிஷேகத்தின் போது குடத்துக்குள் இடப்படும் பொருட்களுள் தங்க மீன்களும், தங்கத் தாமரைப் பூக்களும் இடம்பெறுகின்றன. பூஜை முடிந்ததும் தங்கச் சாமரம் கொண்டு கவரி வீசுவர்.

மாசித் திருவிழாவின் 8ஆம் நாளன்று ஸ்ரீசண்முகருக்கு அபிஷேகிக்கும்போது தங்கப்பிடியுடன் கூடிய காண்டாமிருகக் கொம்பின் வழியாக நீர் ஊற்றுகிறார்கள். இவை தவிர தங்க ஆமை ஒன்றும், கும்பாபிஷேகத்தின்போது தலைமைப் பட்டர் அணிந்துகொள்ள நவரத்தின மோதிரங்களும் உள்ளன.

இலங்கை மன்னன் கண்டி அரசன் கனவில் திருச்செந்தூர் முருகன் தோன்றி, சந்தன மரம் ஒன்றை வெட்டிக் கடலில் மிதக்க விடச் சொன்னார். மன்னன் வெட்டித் தள்ளிய மரம் திருச்செந்தூர்க் கரையை அடைந்தது. இந்த மரமே கொடிமரமாக உள்ளது. இந்தச் செய்தி திருச்செந்தூர் பிள்ளைத் தமிழிலும் இடம் பெற்றுள்ளது.

திருச்செந்தூர் கோயில் மடைப் பள்ளியில் வேலை பார்த்த வென்றிமாலை. என்பருக்கு "சம்ஸ்கிருதத்தில் உள்ள தலபுராணத்தை தமிழில் சொல்லித் தா" என்ற முருகனின் கட்டளைக்கினங்க 'செவலூர் சாஸ்திரிகள்' சொல்லச் சொல்ல, செந்தூர் தல புராணத்தை மொத்தம் 899 தமிழ்ப் பாடல்களாக புனைந்தார் வென்றிமாலை. வென்றிமாலைக்கு கவிராயர் பட்டம் தந்தார் சாஸ்திரியார்.

இந்தப் புராணத்தை புறக்கணிக்கப்பட்டு, கடலில் வீசப்பட்டது, அந்தப் புராணம் கடலில் மிதந்து இலங்கை சென்றடைந்து முருகனின் புகழ் இலங்கையில் பரவியது. இந்த புராணம் திருச்செந்தூர் முருகன் கோவிலில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.









வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
வாழ்க வளமுடன்
எங்களிடம் உங்கள்
வீட்டிற்கு தேவையான
பிரிட்ஜ், வாஷிங்மெஷின்,
மின்விசிறி உள்ளிட்ட பல்வேறு
மின்சாரப் பொருட்களும், திருமண
சீர்வரிசை, கட்டில், மெத்தை, தலையணை,
நவீன சேர்கள் இன்னும் பலவிதமான,
புதுவிதமான
பொருள்களும் ஒரே இடத்தில்
வாங்கி மகிழுங்கள்
Prop:
S.முனீஸ்வரி
சீர்வரிசை எலக்ட்ரிக் பர்னிச்சர்ஸ் வாங்க..
உங்கள் வாசுதேவன் ஹோம் அப்ளையன்ஸ்க்கு வாருங்கள்...
வாசுதேவன்
பர்னிச்சர்ஸ் & ஹோம் அப்ளையன்ஸ்
30/51, வள்ளல் பாண்டித்துறை வணிக வளாகம், அரண்மனை இராமநாதபுரம்
7598268209 / 8778458626

# தட்சிண கைலாயம்

## தமிழக கேரளா எல்லையில் உலகில் மிக பெரிய சிவலிங்கம்

கன்னியாகுமரி திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நாகர்கோவில் அருகே தமிழக கேரளா எல்லையில் உள்ள களியக்காவிளை அருகே உதயார்ரின்கர செங்கல் என்னுமிடத்தில் தட்சிண கைலாசம் மகேஸ்வரம் ஸ்ரீ சிவ பார்வதி கோவில் உள்ளது.

இக்கோவிலில் 112 அடி உயரம் கொண்ட ஆஞ்சநேயர் வழிபடும் மகா சிவலிங்கத்திற்கு மீண்டும் உலக அங்கீகாரம்: தட்சிண கைலாசம் மகேஸ்வரம் ஸ்ரீ சிவ பார்வதி கோவிலில் உலக சாதனை படைத்த உலகின் மிக உயரமான சிவலிங்கம் அமைந்துள்ள மகா சிவலிங்கம் மீண்டும் உலக அங்கீகாரம் பெற்றுள்ளது.

இது குளோபல் ரெக்கார்ட்ஸ் – ரிசர்ச் பவுண்டேஷனால் தேசிய சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமைப்பின் நிர்வாகிகள் கோயிலுக்குச் சென்று விரிவாகச் சோதனையிட்டனர். அங்கீகாரச் சான்றிதழை மாண்புமிகு சத்தீஸ்கர் வருவாய்த் துறை அமைச்சர் ஸ்ரீ டாங்க் ராம் வர்மா சுவாமி மகேஸ்வரானந்தா சரஸ்வத்திடம் வழங்கினார்.

குடும்பத்துடன் வந்திருந்த மாண்புமிகு அமைச்சர் கோயில் மற்றும் சிவலிங்கத்தை தரிசித்துவிட்டு திரும்பினார். மனித வாழ்வில் எங்கும் காண முடியாத அற்புதக் காட்சிகளும், 80 அடி உயரத்தில் வீற்றிருக்கும் மகா சிவலிங்கமும், அற்புதமான அனுமனும், இந்த மகா சிவலிங்கத்தையும் தவற விடுவது பெரும் இழப்பு என்றார். மேலும் பல பாராட்டுகளை வெல்வார்கள். இவ்விழாவில் கோவில் மேல் சாந்தி குமார் மகேஸ்வரம் கலந்து கொண்டார். இக்கோவிலில் விநாயகப் பெருமானின் 32 வடிவங்கள் இருக்கின்றன.

விநாயகப் பெருமான் தடைகளை நீக்குபவர், நல்ல ஆரம்பம் மற்றும் நல்ல அதிர்ஷ்டத்தின் கடவுள். வாழ்வின் பல்வேறு நிலைகளில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளில் இருந்து பக்தர்களைக் காப்பாற்ற விநாயகப் பெருமான் 32 வடிவங்களை மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயிலில் நிறுவி வழிபடுகின்றனர்.

### விநாயகப் பெருமானின் 32 வடிவங்கள்

- பால கணபதி (குழந்தை போல்)
- பக்தி கணபதி (பக்தர் வடிவம்)
- துண்டி கணபதி (கணபதியை தேடி)
- துர்கா கணபதி (அம்மா துர்காவைப் போன்றவர்)
- த்விஜ கணபதி (இரண்டு முறை பிறந்தவர்)
- த்விமுக கணபதி (இரண்டு தலைகளுடன்)
- ஏகதந்த கணபதி (ஒற்றைத் தந்தம்)
- ஏகாக்ஷர கணபதி (ஒற்றெழுத்து இறைவன்)
- ஹரித்ரா கணபதி (செல்வத்திற்காக)








- ஹேரம்ப கணபதி (அற்புதமான பாதுகாவலர்)
- க்ஷிப்ர கணபதி (விரைவாக அருள்பாலிக்கிறார்)
- க்ஷிப்ர பிரசாத கணபதி (விரைவான வெகுமதி)
- லட்சுமி கணபதி (அதிர்ஷ்டசாலி)
- மகா கணபதி (பிரபலமாக வழிபடப்படுகிறது)
- நிருத்ய கணபதி (நடனக் கலைஞர்)
- ரிணமோசன கணபதி (கடன்களில் இருந்து விடுவிப்பவர்)
- சங்கடஹர கணபதி (துக்கங்களைப் போக்குபவர்)
- சக்தி கணபதி (சக்தி வாய்ந்த வடிவம்)
- சித்தி கணபதி (புத்தியின் மாஸ்டர்)
- சிம்ம கணபதி (அச்சமற்ற)
- சிருஷ்டி கணபதி (படைப்பாளர்)
- கணபதி கேடட்கள் (இளைஞர்)
- திரிமுக கணபதி (மூன்று முகம்)
- த்ரயக்ஷர கணபதி (ஏயுஎம் இறைவன்)
- உச்சிஷ்ட கணபதி (மேன்மையின் இறைவன்)
- உத்தண்ட கணபதி (தர்மத்தை அமல்படுத்துபவர்
- ஊர்த்துவ கணபதி (உயர்ந்தவர்)
- வரத கணபதி (வரம் கொடுப்பவர்)
- விக்ன கணபதி (தடைகளின் அதிபதி)
- விஜய கணபதி (வெற்றி)
- வீர கணபதி (தைரியமானவர்)
- யோக கணபதி (யோக தோரணையில்)

மகேஸ்வரம் கோவிலில் விநாயகப் பெருமா னின் இந்த 32 வடிவங்களையும் சேர்த்து வழிபட் டால், ஒரு பக்தரின் வாழ்க்கையில் உள்ள தடை கள் நீங்கும்.

## ஜோதிர்லிங்க தரிசன கோவில்

மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயிலில் சிவபெருமானின் துவாதச (பன்னிரண்டு) ஜோதிர்லிங்கம், ஸ்ரீ சிவபார்வதியைச் சுற்றிலும், சுத்தம்பலத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவில் பன்னிரண்டு வெவ்வேறு இடங்களில் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் உள்ளன. அவை சௌராஷ்டிராவில் (குஜராத்) சோமநாத லிங்கம். ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜுன லிங்கம், உஜ்ஜயினியில் மஹாகாலேஸ்வர லிங்கம், ஹிமவத்கிரியில் நர்மதா நதிக்கரையில் ஓம்காரேஸ்வர லிங்கம், பேவகிரியில் பீமசங்கர லிங்கம், ஜார்கண்டில் வைத்தியநாத லிங்கம்.



வாரணாசியில் கோதாவரி விஸ்வநாத லிங்கத்தில் திரயம்பக லிங்கம், தாருகாவனத்தில் நாகேஸ்வரலிங்கம், ராமேஸ்வரத்தில் ராமேஸ்வர லிங்கம், தௌலதாபாத்தில் கிருஷ்ணேஸ்வர லிங்கம். ஒவ்வொரு ஜோதிர்லிங்கமும் சிவபெரு மானின் வெவ்வேறு வெளிப்பாடுகளாகக்கருதப் படுகிறது. துவாதச ஜோதிர் லிங்க வடிவில் சிவபெரு மானின் அருளால் பிரசாதம் வழங்கு வதன் மூலமும், அனைத்து வகையான தோஷங் களும் (துரதிர்ஷ்டங்களும்) நோய்களும்தங்கள் வாழ்க்கையில் இருந்து நீங்கும் என்று பக்தர்கள் நம்புகிறார் கள். மகேஸ்வரம் கோவிலின் தனிச்சிறப்புகளில் ஒன்று,

இக்கோவில் ஒரே நேரத்தில் உலகின் மிக உயர்ந்த சிவலிங்கத்தையும், 32 விநாயக மூர்த்தங்களையும், 12 ஜோதிர்லிங்க தரிசனத் தையும் ஒன்றுசேர கிடைப்பதால் உலகம் முழுவதும் உள்ள பக்தர்கள் மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோவிலுக்கு துவாதச (பன்னிரண்டு) ஜோதிர்லிங்கத்தை ஒன்றாக வணங்குவதற்கு வருகை தரு கின்றனர்.

Temple City
Temple of Hotels
PRODUCT of INDIA
HOME - MADE PODI, PICKLES & VADAGAMS
Scan for Details
NEW JAIL ROAD 86055 13333 | THALAVOY STREET 95752 93333 | MATTUTHAVANI 98946 83335 | PERIYAR BUS STAND 96296 83333 | BIBIKULAM 95970 13333 | UTHANGUDI 99943 33396
AYYANKOTTAI, NH-44 97913 93333 | VADIPATTI, NH-44 97915 93333 | SIVARAKOTTAI, NH-44 86082 83333 | MADURAI-TENKASAI MAIN ROAD ALAMPATTI, NH-744 97870 08333 | RAILWAY JUNCTION 80554 93333 | BATLAGUNDU BYPASS 88016 93333
Soon at SILAIMAN NH-87 KARIAPATTI NH-38
www.templecityfoodproducts.com
www.hoteltemplecity.com
customercare@hoteltemplecity.com
/hoteltemplecity

# தமிழகத்தில் பக்தர்களே கங்கை தீர்த்தத்தால் அபிஷேகம் செய்யும்

# குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில்





சிவவழிபாடுகளில் முக்கியமாக பிரதோஷ வழிபாடு உள்ளது. பிரதோஷம் நேரமான மாலை வேளையில் நந்தி பகவானுக்கும் சிவனுக்கும் ஒரேநேரத்தில் அபிஷேக வழிபாடு நடைபெறும்.

இந்த நேரத்தில் பக்த்தர்கள் நந்தி பகவானுக்கு வைக்கப் படும் வேண்டுதல்களை சிவபெருமான் தீர்த்து வைக்கிறார் என பக்த்தர்களால் நம்பபட்டு வருகிறது.

ஞாயிறு முதல் சனி வரை ஒவ்வொரு கிழமைகளில் வரும் பிரதோஷம் பலவிதமான நன்மைகளை தருகிறது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி

சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் வளாகத்தில் காசியில் இருந்து பூஜித்து காசிவிஸ்வ நாதர், காசி நந்தி மற்றும் காசி துர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசியில் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது.

பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு வழங்கபடும் கங்கைதீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெரு மானின் விக்ரகத்தைத் தொட்டு மனமுருகி வேண்டி வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவி லில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் கீழே காணும் எண்ணில் தொடர்பு கொண்டால், கங்கை நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் கூறப்படும், கங்கை நீர் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 9444159653.


இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
உரிமையாளர்: M.இராமு & சன்ஸ்


ஸ்ரீ ஆனந்தவள்ளி பூக்கடை
அனைத்து கோவில் திருவிழா,
இல்ல விஷேசங்களுக்கு புதிய டிசைனில்
பூ மாலைகள் செய்து தரப்படும்
8883464209 / 9790000188
சுந்தரபுரம் கடை வீதி தேவர் சிலை எதிரில் மானாமதுரை


aanmeegamalar.com


இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
உலக பிரசித்தி பெற்ற மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர்
பேரருளால் தரம் எங்களுக்கு இறைவன் கொடுத்த வரம்!
தரத்தில் உயர்ந்தது! ருசியில் சிறந்தது! எண்ணெய் குடிக்காத அப்பளம் உண்ண தூண்டும் உன்னத சுவை!
ஸ்ரீராம் அப்பளம்
& புட் பஜார்
SRI RAM APPALAM
Special Quality
Special Quality
Export Quality
எங்களிடம் தரமான அப்பளம், அப்பளப்பூ, மிளகு அப்பளம், சோவி அப்பளம், கல்யாண அப்பளம், மோதிர அப்பளம், பாய் அப்பளம், மசாலா அப்பளம், சீரக அப்பளம், அரிசி அப்பளம், தக்காளி வடகம், வெங்காய வடகம், சோற்றுக் கூழ் வடகம், ஜவ்வரிசி வடகம், கலர் வடகம் வகைகள்
ஸ்ரீராம் மஞ்சள் தூள், அரிசி மாவு, புட்டு மாவு, முறுக்கு மாவு, பெருங்காயம், பருப்பு வகைகள், மக்ருன் வகைகள், மோர் வத்தல், சுண்ட வத்தல் மற்றும் ஊறுகாய் வகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்
(ஸ்ரீராம் அப்பளம் எண்ணெய் குடிக்காத அப்பளம்)
தரம்! இறைவன் எங்களுக்கு அளித்த வரம்
Email Id: sriram.rajkumar1989@gmail.com / Web:www.sriramappalam.com
தயாரிப்பு கூடம்: 4/15A அனுப்பானடி சாலை, சிந்தாமணி, மதுரை- 625009
விற்பனையகம்: 51, அம்மன் சன்னதி, மதுரை - 625 001.
தொடர்புக்கு: 98432 60908, 9787932299, 95004 95248, 84388 70908

aanmeegamalar.com

# பார்வதி தேவி குண்டலம் பிரகாசித்த இடம் காசி

## காசியும் முக்கிய தகவல்களும்

அஸ் நதி கங்கையில் கலக்கும் பகுதியில் அஸ்சங்கம கட்டம் அமைந்துள்ளது. இங்கிருந்து தான் காசி தலம் ஆரம்பமாகிறது. இக்கட்டத்தை காசியின் நுழைவுவாயில் என்று சொல்வர். இக்கரையில் அமைந்துள்ள சிவலிங்கம் "அஸ்சங்கமேஸ்வரர்" எனப்படுகிறார்.

முதலில் அஸ்சங்கமத்தில் நீராடி சங்கமேஸ்வரரை வணங்க வேண்டும்.

துளசி ராமாயணத்தை எழுதிய துளசிதாசர் இந்த கட்டத்தில் இறங்கி கங்கையில் மறைந்தார் என்பது குறிப் பிடத்தக்க அம்சம்.

இதையடுத்து தசாஸ்வமேத கட்டத்தில் நீராட வேண்டும். இங்கு பிரம்மன் பத்து அசுவமேத யாகங்களை செய்ததால் தசாஸ்வமேத கட்டம் என பெயர் பெற்றது. இந்த தீர்த்தக் கரையில் சூலடங்கேஸ்வரர் என்ற சிவலிங்கம் உள் ளது.

இதையடுத்து வரணசங்கம கட்டத்தில் நீராடச் செல்ல வேண்டும். இங்கு வருண நதி கங்கையில் கலக்கிறது. இந்த கரையில் உள்ள ஆதிகேஸ்வரரை வணங்கிவிட்டு, யமுனை, சரஸ்வதி, சிரணா, தூதபாய் ஆகிய நதிகளும் கங்கையில் கலக்கும் பஞ்சகங்கா கட்டத்திற்கு செல்ல வேண்டும். இங்கு நீராடி விட்டு கரையிலுள்ள பிந்துமாதவர் மற்றும் கங்கேஸ்வரரை வணங்க வேண்டும்.

பஞ்ச தீர்த்தக் கட்டங்களில் ஐந்தாவதாக அமைந்துள்ள மணிகர்ணிகா கட்டத் திற்கு செல்ல வேண்டும். இங்கு நீராடி பித்ருக்களுக்காக தர்ப்பணம் செய்ய வேண்டும். இந்த கரையிலுள்ள மணிகர்ணிகேஸ்வரர் மற்றும் அம்பாளையும் வழிபட வேண்டும்.

காசிக்கு செல்பவர்கள் அங்குள்ள துண்டிவிநாயகரை வணங்கினால் தான் காசி யாத்திரையின் பலன் முழுமை யாக கிடைக்கும் என கூறப்படுகிறது.

பாரத நாட்டில் குடியேறிய ஆரியர்களில் காசி என்ற பிரிவினர் இங்கே கி.மு. 1400 வாக்கில் வாழ்ந்து வந்தமை யினால் இத்தலம் காசி என்ற பெயர் பெற்றது.

பார்வதி தேவியின் காதிலுள்ள மிகப் பிரகாசமான குண்டலம் இங்கே விழுந்து பிரகாசித்ததால் காசி என ஆயிற்று என்றும் கூறுவர்.

பன்னிரு ஜோதிர் லிங்கங்களில் மரகதலிங்க மாக சிவலிங்கம் பிரகாசிப் பதால் இத்தலம் காசி எனப் பெயர் பெற்றது என்பர்.



சிவபெருமான் விரும்பி மகா மயானத்தருகே இருப்பதால் காசி என்றவுடனே, மோட்சம் கிடைப்பதால் இத்தலம் காசி என்றனர்.

கா = தோள் சுமை, சி= பெண் சுமை. பார்வதி தேவியைத் தோளில் சுமந்து கொண்டு, சிவ பெருமான் ஹரித் வாரிலிருந்து இங்கே வந்தமையால் இத்தலம் காசி என அழைக்கப்படுகிறது என்றும் கூறுவர்.

வாரணம், அசி என்ற இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இத்தலம் இருப்பதால் இத்தலத்திற்கு வாராணசி என்ற பெயர் ஏற்பட்டது.

பனாரன் என்ற அசுரன் இத்தலத்தைப் புதுப்பித்து ஒரு லிங்கம் அமைத்து வழிபட்டதால் இத்தலத்திற்கு பனாரஸ் என்ற பெயர் ஏற்பட்டது.

அவி = தலைவன், முத்தன் = சிவபெருமான். வேதங் களுக்குத் தலைவன் சிவபெருமான். அவர் வாழுமிடம் அவிமுக்தம் என இத்தலத்திற்குச் சிறப்பாகப் பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

சிவபெருமான் சுடலையை விரும்பி அங்கே வாழ்பவன் ஆனதால் இத்தலத்திற்கு மகாமயானம் என்ற பெயரும் உண்டாகியது என்பர்.

இறப்பவர்களுக்குச் சிவபெருமான் ராம் என்று உபதேசம் செய்து மோட்சம் வழங்குவதால் மகாமயானம் எனப்பட்டது.

நம் நாட்டில் உள்ள முக்தித் தலங்கள் ஏழினுள் காசி தலையாய முக்தித் தலம் ஆகும்.

காசியில் ஐந்து உபநதிகள் கங்கையில் கலக்கின்றன. காசிக் கங்கையில் நீராடினால் பாவங்கள் எல்லாம் போய் புனிதம் உண்டாகும்.

லோகமாதா அன்னபூரணி காசியம்பதியில் இறைவனுக்கும் மக்களுக்கும் உணவு வழங்கி சக்தியூட்டுகின்றார்.

காசியின் மகிமையை உணர்ந்த தென்னாட்டு மக்கள், காசியில் காவாசி அவினாசி என்று பழமொழி கூறுகின்றனர். தங்கள் ஊர்களுக்குச் சிவகாசி, தென்காசி என்றெல்லாம் பெயர் வைத்துப் பெருமைப்படுகின்றனர்.

தென்னாட்டில் எல்லாச் சிவன் கோயிலிலும் காசி விசுவநாதர் லிங்கமும், காசி விசாலாட்சியும் வைத்து வழி படுகின்றனர்.

மும்மூர்த்திகளும், தேவர்களும், விசுவநாதரைப் பூஜித்த தலம் காசி ஆகும்.

அனுமன், இராமேசுவரத்தில் இராமர் பூஜிக்க லிங்கம் எடுத்த தலம் காசி.

கேதார்நாத் போக முடியாத ஒரு பக்தனுக்கு சிவன் கங்கைக் கரையில் காட்சி தந்தார். அந்த இடம் கேதார்நாத் காட் என்கின்றனர். அங்கே கேதார்நாத்திலிருப்பது போலவே சுயம்புவாகத் தோன்றிய ஒரு பாறையையே சிவலிங்கமாக மக்கள் வழிபடுகின்றனர்.

விசுவாமித்திரரால் பரிசோதனைக்குட்பட்ட அரிச்சந்திர மகாராஜா, சிவபெருமான் தரிசனம் பெற்றது காசியம்பதி யாகும்.

சனிபகவான் தவம் செய்து, சிவபெருமான் வரத்தால் நவக்கிரகங்களில் ஒன்றானது காசியில் தான்.

காசியின் கங்கைக் கரையில் நம் முன்னோர்களுக்குச் சிரார்த்தம் முதலிய வைதீகச் சடங்குகள் செய்யலாம். அதனால் நாமும் நம் முன்னோர்களும், புனிதம் அடையலாம்.



## தீர்த்தக் கட்டங்கள்

கங்கை நதியின் ஓரத்தில் ஏராளமான படித்துறைகள் உள்ளன. இதில் 64 தீர்த்தக்கட்டங்கள் உள்ளன. இத்தீர்த்தக் கட்டங்கள் அனைத்திலும் நீராடுவது மிகுந்த பலனைத் தரும். ஆனால், எல்லோருக்கும் இது சாத்தியமல்ல. எனவே, அஸ்சங்கம், தசாஸ்வமேத கட்டம், வரணசங்கம கட்டம், பஞ்சகங்கா கட்டம், மணிகர்ணிகா கட்டம் ஆகிய படித்துறைகளில் ஒரே நாளில் நீராடி மகிழ்வது மிகவும் புனிதமானதாகும். இதற்கு பஞ்சதீர்த்த யாத்திரை என்று பெயராகும்.


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்



தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை

அரசு பதிவு பெற்ற மருத்துவமனை

மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர் எதிர்புறம்,
அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி,
தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு,
MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர். காவல் நிலையம் பின்புறம். இராமநாதபுரம்.
அலைபேசி: 9944167183. 9360132498

HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 ◆ ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL

இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.

Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com

Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791



தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics

# 27 நட்சத்திரத்திற்குரிய திருக்கோவில்கள்



ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு திருத்தலங்கள் இருக்கும் இந்ததிருத்தலங் களில் வீற்றிருக்கும் இறை வனை வழிபட்டால், அந்த ராசிக்குரிய பலன்களை பெறலாம், அதே நேரம் ராசி மட்டுமின்றி ஜோதிடத்தில் நட்சத்திரத் திற்கும் முக்கியத்துவம் தரப்படுவதால், அந்த அந்த நட்சத்திரத்திற்கு என்று ஒரு சிறப்பு திருத்தலங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

அப்படி அந்த திருத்தலங்களைசென்று வழிபட்டால், நட்சத்திரத்தால் வரவிருக்கும் தீமைகள் நம்மை அண்டாமல் காக்கப் படுவோம், இவ்வாறு ஒவ்வொரு நட்சத்திரத்திற் குரிய மற்றும் நட்சத்திரத்திற்கு உரிய திருத்தலங் களைப் பற்றி பார்ப்போம்.

அஸ்வினி: முக்கிய ஸ்தலம் கூத்தனூர்

மற்ற தலங்கள்: ஸ்ரீரங்கம், திருத்துறைபூண்டி, கொல்லி மலை.

பரணி: முக்கிய ஸ்தலம்: நல்லாடை

மற்ற தலங்கள்: திருநெல்லிக்கா, கீழப்பறையார், பழனி, பட்டீஸ்வரம், திருத்தங்கல், திருவாஞ்சியம்.

கார்த்திகை: முக்கிய ஸ்தலம் கஞ்சானகரம்

மற்ற தலங்கள்: காஞ்சிபுரம், திருப்புகலூர், கீரனூர், திருச்செந்தூர், திருவொற்றியூர், கானாட்டுமுள்ளூர்.

ரோஹிணி: முக்கிய ஸ்தலம் திருக்கண்ண மங்கை

மற்ற தலங்கள்: காஞ்சிபுரம், திருவானைக்கோவில், ஜம்பை, கழுகுமலை, செம்பாக்கம், கொரட்டூர், நெல்லிச்சேரி, மன்னார்குடி, பெருமாள் அகரம், திருவரங்கம், திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி.

மிருகசீரிடம்: முக்கிய ஸ்தலம் எண்கண்

மற்ற தலங்கள்: அம்பர் மாகாளம், ஒசூர், முசிறி, தாழ மங்கை.

திருவாதிரை: முக்கிய ஸ்தலம் சேங்காலிபுரம்

மற்ற தலங்கள்: சிதம்பரம், அதிராம்பட்டினம்.

புனர்பூசம்: முக்கிய ஸ்தலம் சீர்காழி

மற்ற தலங்கள்: பழைய வாணியம்பாடி,திரு வள்ளூர், திருநெல்வேலி, திருப்பாசூர், திருவெண்ணெய்நல்லூர்.

பூசம்: முக்கிய ஸ்தலம் திருச்சேறை

மற்ற தலங்கள்: விளங்குளம், ஒழுந்தியாபட்டு, ஆவூர், கோனேரிராஜபுரம், பரிதிநியமம், திருச் சுழி, அழகர் கோயில்.

ஆயில்யம்: முக்கிய ஸ்தலம் திருப்புறம்பியம்

மற்ற தலங்கள்: திருந்துதேவன்குடி, நண்டான் கோயில், சங்கரன்கோயில், திருப்புனவாசல், புள்ளபூதக்குடி, திருவிடந்தை.

மகம்: முக்கிய ஸ்தலம் திருவெண்காடு

மற்ற தலங்கள்: திருக்கச்சூர், திருவரத்துறை, கீழப் பழுவூர், ஆலம்பொழில், அன்பில், திருவாலங் காடு.

பூரம்: முக்கிய ஸ்தலம் தலைசங்காடு

மற்ற தலங்கள்: நாலூர், கஞ்சனூர், திருவரங் குளம், புரசைவாக்கம்.

உத்திரம்: முக்கிய ஸ்தலம் கரவீரம்

மற்ற தலங்கள்: காஞ்சிபுரம், திருவக்கரை, செய் யூர், கூவத்தூர், மயிலாடுதுறை, இடையாற்று மங்கலம்.

ஹஸ்தம்: முக்கிய ஸ்தலம் கோமல்

மற்ற தலங்கள்: தர்மபுரி, செய்யாறு, புவனகிரி, ஏமப்பூர், எழிலூர், திருவாதவூர், திருவேற்காடு.

சித்திரை: முக்கிய ஸ்தலம் திருவையாறு

மற்ற தலங்கள்: அண்ணன்கோயில், தாடிக் கொம்பு, திருநாரயணபுரம், நாச்சியார் கோயில், திருவல்லம், திருவக்கரை, திருக்கோயிலூர், திருமாற்பேறு.

சுவாதி: முக்கிய ஸ்தலம் திருவிடைமருதூர்

aanmeegamalar.com

மற்ற தலங்கள்: திருப்புடைமருதூர், பெரியதிருக்கோணம், கடத்தூர், பிள்ளையார்பட்டி, நயினார் கோயில், ஸ்ரீரங்கம்.



**விசாகம்: முக்கிய ஸ்தலம் கபி ஸ்தலம்**

மற்ற தலங்கள்: திருமலைக்கோயில், அத்தாள நல்லூர், தீயத்தூர், திருநன்றியூர், நத்தம்.

**அனுஷம்: முக்கிய ஸ்தலம் நாச்சியார் கோயில்**

மற்ற தலங்கள்: திருவொற்றியூர், திருவண்ணாமலை, திருப்புனவாசல், திருக்கண்ணமங்கை, நீடூர், திருநன்றியூர்.

**கேட்டை: முக்கிய ஸ்தலம் வழுவூர்**

மற்ற தலங்கள்: பிச்சாண்டார் கோயில், பசுபதி கோயில், பல்லடம், திருப்பராய்த்துறை.

**மூலம்: முக்கிய ஸ்தலம் மயிலாடுதுறை**

மற்ற தலங்கள்: மாந்துறை, ஆச்சாள்புரம், பாமணி, கோயிலூர், குலசேகரப்பட்டினம், பொ ழிச்சலூர், மம்பேடு.

**பூராடம்: முக்கிய ஸ்தலம் கடுவெளி**

மற்ற தலங்கள்: நகர், சிதம்பரம், இரும்பை மகாகாளம்.

**உத்திராடம்: முக்கிய ஸ்தலம் இன்னம்பூர்**

மற்ற தலங்கள்: கோயம்பேடு, காங்கேய நல்லூர், பேளூர், கீழ்பூங்குடி, திருப்பூவனூர், திருக்கடிக்குளம், திருப்பூவணம், திருக்கோஷ்டியூர், திருக்குற்றாலம்.

**திருவோணம்: முக்கிய ஸ்தலம் திருவிடை மருதூர்.**

மற்ற தலங்கள்: ராஜேந்திரப்பட்டினம், திரு முல்லைவாயில், திருப்பாற்கடல்.

**அவிட்டம்: முக்கிய ஸ்தலம் திருபூந்துருத்தி**

மற்ற தலங்கள்: விருதாச்சலம், திருவான்மியூர், திருக்காட்டுப்பள்ளி, திருகொள்ளிக்காடு, திருமறைக்காடு, கொடுமுடி.

**சதயம்: முக்கிய ஸ்தலம் திருப்புகலூர்**

மற்ற தலங்கள்: கடம்பனூர், கோயில் கடம் பனூர், ஆதி கடம்பனூர், இளங்கடம்பனூர், வாழிக் கடம்பனூர், பெருங் கடம்பனூர், கடம்பர் கோயில், மேலக்கடம்பூர், பிச்சாண்டார் கோயில், மதுரை.

**பூரட்டாதி: முக்கிய ஸ்தலம் திருக்குவளை**

மற்ற தலங்கள்: ரெங்கநாதபுரம்.

**உத்திரட்டாதி: முக்கிய ஸ்தலம் திருநாங் கூர்.**

மற்ற தலங்கள்: தீயாத்தூர், வைத்தீஸ்வரன் கோயில்.

**ரேவதி: முக்கிய ஸ்தலம் இலுப்பைப்பட்டு**

மற்ற தலங்கள்: காருகுடி, இரும்பை மாகாளம், திருச்செங்கோடு.


அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை

M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்

A.T.T.லாட்ஜ் அகிலா காம்ப்ளக்ஸ்









அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்

பைபாஸ்ரோடு, மானாமதுரை

மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்



L.சுரேஷ்



S.அண்ணாமலை

செல்: 98424 68215 / 73737 68215

# கோவில் மாநகரம் மதுரையில் மகாபெரியவா திருக்கோவில்



## கோவில் திருப்பணியில் பங்கெடுக்க பக்தர்களுக்கு அழைப்பு

காஞ்சிஸ்ரீ மகா பெரியவா..! கலியுகத்தில் கண் கண்ட தெய்வமாக பலரால் போற்றப்படுகிறவர். கருணைக்கடலான ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், பாரததேசம் முழுதும் புண்ணிய யாத்திரைகள் மேற் கொண்டு முகா மிட்டு அருளாசிகளை வழங்கியுள்ளார்.

மீனாட்சி சொக்கநாதர் கோவில் கும்பாபிஷேகம்உள்ளிட்ட வைபவங்களுக்காகவும் மதுரைக்கு பல முறை விஜயம் புரிந் துள்ளார். அவருக்கு மதுரையின் புண்ணிய திருத்தலமான வ்ருஷபாத்ரி எனப்படும் திருமாலிருஞ்சோலை கள்ளழகர் கோவில் மலை அடிவாரத்தில், திருக் கோவிலை அமைக்க இருக்கிறது மதுரை அனுஷத்தின் அனுக்கிரகம்.

கள்ளழகர் திருக்கோவிலின் தீர்த்தக்குளம் அமைந் திருக்கக்கூடிய பொய்கைக்கரைப்பட்டியில், இயற்கை எழில் சூழ பொலிவுற அமையவிருக்கிறது இந்த திருக்கோவில். இதற்கான பூர்வாங்க பணிகள் வெகு விரைவாக தொடங் கப்பட இருக்கின்றன.

மதுரை எஸ்.எஸ்.காலனியில், ஸ்ரீகாஞ்சி மகா பெரியவா கிருஹம் என்னும் கோவிலை நிர்வ கித்து நடத்திவரும் அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலுவின் சீரிய முயற்சியில் இந்த கோவில் அமையவிருக்கிறது.


மதுரையில் அழகர்மலை அருகே அமையவுள்ள அருள் மிகு ஸ்ரீ மகாபெரியவா ஆலய புனித திருப்பணியில் ஆன் மிக அன்பர்களும், ஸ்ரீகாஞ்சி மகாபெரியவரின் பக்தர்களும் பங்களிப்பு செய்து அவரது அருளாசியை பெறலாம்.

திருப்பணிக்கு தேவையான பணமாக தருவது மட்டுமின்றி கட்டிட தளவாட சாமான்கள், இதர பொருட்களாக வாங்கி கொடுத்தும் திருப்பணியில் பங்கெடுக்கலாம். கோவில் அமையவிருக்கிற இடம் மற்றும் அங்குள்ள கட்டுமானத்தை சேர்த்து சதுர அடி ஒன்றுக்கு ரூ.3ஆயிரத்து 500 ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. பக்தகோடி மெய்யன்பர்கள் சதுரடி வீதமாக 3,500 அல்லது 2 சதுர அடி, 5 சதுர அடி, 10 சதுர அடி என தாங்கள் விரும்பும் அளவுகளில் அதற்கான தொகையினை தந்தும் திருப்பணியில் பங்கெடுக்கலாம்.

இந்த கோவில் அமைவதற்கான செலவுகள் பல லட்சங்களை தொடுவதால், ரூ.1 லட்சம் மற்றும்அதற்கு மேல் நன்கொடையாக பங்களிப்பு செய்யும் நன்கொடையாளர் களின் பெயர்கள் கோவில் கல்வெட்டிலும் பொறிக்கப்பட இருக்கிறது. அடுத்த ஒரு ஆண்டுக்குள் கோவில் கட்டுமானம் பூர்த்தி பெற்று ஸ்ரீகாஞ்சி மகா பெரியவா சந்திரசேகரேந்திர சுவாமிகளின் அருள் ஆசியோடு கும்பாபி ஷேகம் செய்யப்பட இருக்கிறது. அவரது அருளாசியை பெற்ற பக்தர்கள், |திருப்பணியில் பங்கு பெறும் அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள அன்போடு அழைக்கி







றோம். நன்கொடைகளை அனுப்ப வேண்டிய கணக்கு விவரம், நெல்லை பாலு மதுரையின் அனுஷத்தின் அனு கிரகம் தொடர்பு எண்: ஜிபே, போன்பே 9442630815.

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

## இயலாதோர், ஆதரவற்றோருக்கு உணவு வழங்கி...
## முன்னோர் ஆசீர்வாதம் பெறுங்கள்

# மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்

Regd.No.4-50/2021 நன்கொடைகளுக்கு 80G வரிவிலக்கு உண்டு



மதுரையில் ரோட்டோரத்தில், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உணவுக்காக தவித்துக் கொண்டிருப்போருக்கு உதவும் விதத்தில் "மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்" என்ற அமைப்பை தொடங்கி கடந்த **1260** நாட்களுக்கு மேலாக தினமும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம்.

தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் மட்டுமின்றி பிற நாட்களிலும் இந்த புனிதப் பணியில் தாங்களும் கரம் கோர்த்தால் இத்திட்டம் வெற்றியடையும் என்பது உண்மை! சந்தோஷத்தில் பெரிய சந்தோஷம் அடுத்தவரை சந்தோஷப்படுத்திப் பார்ப்பது தான்.

இயலாதவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டு ரோட்டோரத்தில் இருப்பவர்களின் வயிற்றுப்பசி ஆற்றுவது மூதாதையர்களுக்கு திதி கொடுப்பதற்கு சமமானது

## தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்

ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு ரூ.40 வீதம் 300 பேருக்கு ரூ. 12,000 ஆகிறது

| | |
|---|---|
| 50 நபர்களுக்கு - ரூ.2,000 | 200 நபர்களுக்கு - ரூ.8,000 |
| 100 நபர்களுக்கு - ரூ.4,000 | 300 நபர்களுக்கு - ரூ.12,000 |

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை-16
9442630815 (G-Pay)

**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
A/C No:110031396472
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006

பணம் அனுப்ப G Pay PhonePe No. 9442630815









தரிசிக்க வாருங்கள்
தினமும் காலை 7.00 - 9.00
மாலை 6.00 - 8.00 மணி

## ஸ்ரீ மஹா பெரியவா கோயில்

13, பொன்மேனி நாராயணன் ரோடு, S.S.காலனி, மதுரை.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 6 மணிக்கு குருவார சிறப்பு பூஜை நடைபெறும்.
பங்கேற்பவர்களுக்கு ஸ்படிக மாலை பிரசாதமாக வழங்கப்படும்

Rtn. நெல்லை பாலு, நிறுவனர் அனுஷத்தின் அனுக்கிரகம், செல் : 94426 30815

# இராமேஸ்வரமும் தீர்த்தமும் மகிமையும்

இந்தியாவின் மிகமுக்கியமான புன்னியஸ்தலமாக ராமேசுவரம் உள்ளது. மனித அவதாரம் எடுத்து அயோத்தியில் பிறந்து காடுகளில் வாழ்ந்து மனைவியை பிரிந்து வானர படைகளுடன் ராமேசுவரம் தீவில் பாலம் அமைத்து இலங்கை சென்று போரிட்டு ராவணனை வென்று போரில் ஏற்பட்ட தோஷத்தை போக்க ராமன் தன் கரங்களால் மனைவிசீதாதேவியுடன் சிவ பூஜைசெய்த இடம் ராமேசுவரம் ஆகும்.

இங்கு உள்ள தீர்த்தம் மகிமைகள் பற்றி அறிவோம்.

### 1. மகாலெட்சுமிதீர்த்தம்

இது கிழக்கு கோவிலின் பிரதான வாசலில் அனுமார் சன்னதிக்கு எதிரில் தெற்கு பக்கத்தில் உள்ளது. இதில் ஸனானம் செய்தால் சகல ஐஸ்வர்யமும் பெறலாம்.

### 2. சாவித்திரி தீர்த்தம், 3. காயத்ரி தீர்த்தம், 4. சரஸ்வதி தீர்த்தம்

இம்மூன்று தீர்த்தங்களும் அனுமார் கோவிலுக்கு மேல்புறம் உள்ளது. இம்மூன்று தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதால் மத சடங்குகளை விட்டவர், சந்ததியில்லாதவர் இஷ்டசித்தி அடையலாம்.

### 5. சேது மாதவ தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரத்தின் மேற்கு பகுதியில் உள்ள தெப்பக்குளம். இதில் ஸ்ரீராம பிரானால் சகல லெட்சுமி காடாட்சமும்,சித்த சக்தியும் பெறலாம்.

### 6. நள தீர்த்தம்

மூன்றாம் பிரகாரம் மேற்கு பகுதியில் உள்ள சேது மாதவர் சன்னதிக்கு தென்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் கடவுளின் அனுக்கிரகம் பெற்று, சொர்க்கலோக பதவி அடைவர்.

### 7. நீல தீர்த்தம்

மூன்றாம் பிரகாரம் மேற்கு பகுதியில் உள்ள சேது மாதவர் சன்னதிக்கு வடபுறம் உள்ளது. இதில் நீராடுவதால் சமஸ்தயாக பலனையும் அடைந்து சொர்க்கலோக பதவி அடைவர்.

### 8. கவாய தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரம் சேது மாதவர் சன்னதியின் முன்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் தேக ஆரோக்கியம் கிடைக்கும்.

### 9. கவாட்ச தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரம் சேது மாதவர் சன்னதியின் முன்புறம் கவாய தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் நரகத்திற்கு செல்ல மாட்டார்கள். மன வலிமை, தேக ஆரோக்கியம், திட சரீரம் கிடைக்கும்.

### 10. கந்நமாதன தீர்த்தம்

சேது மாதவர் சன்னதியின் முன்பகுதியில் கவாய், கவாட்ச தீர்த்தங்களுக்கு அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் மகாதரித்திரம் நீங்கி ஐஸ்வர்ய சித்தியும் பெற்று பிரம்ம ஹத்தியாதிபாப நிவர்த்தி பெறுவர்.

### 11. சங்கு தீர்த்தம்

இராமநாதசுவாமி கோவில் பிரதான வாசல் உட்புறம் தெற்கு பக்கத்தில் இரண்டாம் பிரகாரத்தில் இதில் நீராடுவதால் செய்நன்றி மறந்த சாபம் நீங்கப் பெறும்.

### 12. சக்கர தீர்த்தம்

இ ரா ம நா த சு வா மி கோ வி ல்



பிரதான வாசல் உட்புறம் உள்ள இரண்டாம் பிரகாரத்தின் வடபுறம் உள்ள கருவூலத்தின் கீழ்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் ஊனம், குருடு, செவிடு ஆகியவை நீங்கி சௌக்கியம் அடைவர்.

### 13. பிரம்மாத்திர விமோசன தீர்த்தம்

இது இரண்டாம் பிரகாரம் வடக்கு பக்கத்தில் பைரவர் சன்னதி அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் பிரம்மஹத்தயாதிதோஷங்களும், பாவங்களும் நிவர்த்தியாவதுடன், பில்லி சூனியமும் நீங்கும்.

### 14. சூர்ய தீர்த்தம்

இது இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கருவூலத்தில் மேற்கு பக்கம் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடுவதால் திரிகாலஞானமும் உண்டாவதுடன் ரோகங்கள் நிவர்த்தியாகும்.

### 15. சந்திர தீர்த்தம்

இது இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கருவூலத்தின் மேற்கு பக்கம் உள்ளது. இதில் நீராடுவதால் ரோக நிவர்த்தி அகலும்.

### 16. கங்கா தீர்த்தம் 17. யமுனா தீர்த்தம்

### 18. காயத்ரி தீர்த்தம்

இம்மூன்று தீர்த்தங்களும்திருக்கோவில் இரண்டாம் பிரகாரத்தில் அமைந்துள்ள கருவூலத்தில் மேற்கு பக்கம் உள்ள சூரியன், சந்திரன் தீர்த்தத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இவைகளில் நீராடுவதனால் பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவைகளும் அஞ்ஞானமும் நீங்கி முக்தி அடையலாம்.

### 19. சாத்யாம்ருத தீர்த்தம்

திருக்கோவில் அம்பாள் சன்னதியின் மூலஸ்தான நுழைவாயிலின் அருகே உள்ள அஷ்டலட்சுமி சன்னதியின் தெற்கு பக்கம் உள்ளது. இதில் நீராடினால் கோபம் பிராம்மணசாபம் நிவர்த்தியாவதுடன், சூரியமூர்த்தி, மோட்ச பிராப்தி ஆகியவை கிடைக்கும்.

### 20. சிவ தீர்த்தம்

இந்த தீர்த்தம் சுவாமி சன்னதி நுழைவாயில் மற்றும் அம்மன் சன்னதி நுழைவாயில் ஆகியவற்றுக்கு இடையே நந்தி தேவருக்கு தென்புறம் அமைந்துள்ளது. இதில் ஸ்நானம் செய்தால் சகல சௌபாக்கியமும் கிடைக்கும்.




### 21. சர்வ தீர்த்தம்

இந்த தீர்த்தம் முதல் பிரகாரத்தில் இராமநாதசுவாமி சன்னதி முன் உள்ளது. இதில் நீராடினால் பிறவிக்குருடு, நோயம் நரை திரையும் நீங்கி வளமடையலாம். கோவி லுக்கு வெளியே பல தீர்த்தங்கள். இவை புயலாலும், ஆக்கிரமிப்பாலும் பாதிக்கப்பட்டதால் இவற்றில் நீராட இயலாது.

### 22. கோடி தீர்த்தம்

இந்த தீர்த்தமானது, இராமர் லிங்கப் பிரதிஸ்டை செய்தபோது, அபிஷேகத்திற்கு நீர் தேவைப்பட்டது. அதனால் ராமர், தன் அம்பின் நுனியைப் பூமியில் வைத்து அழுத்தினதால் அந்த இடத்தில் பூமியைப் பிளந்து கொண்டு நீர் வந்தது. அதுவே கோடி தீர்த்தம் எனப்படுகிறது.

இந்நீரானது இராமநாதசுவாமி மற்றும் எல்லா சுவாமி அம்பாள் ஆகியவர்கள் அபிஷேகத்திற்கு பயன்படுத்தப் படுகிறது. பக்தர்களுக்கு தீர்த்தத்தை பாட்டில்களில் சேமித்து விற்கிறார்கள்.

சிவனாரின் அருளையும் ஸ்ரீராமரின் அருளையும் பெற்றுப் பெருவாழ்வு வாழவைக்கும் மகா தீர்த்தம் இது. இந்த 22 தீர்த்தங்களையும் தவிர, கடலிலேயே கலந்திருக்கிறது அக்னி தீர்த்தம். இதில் நீராடிவிட்டே ஆலய தரிசனத்துக்குச் செல்கி றார்கள் பக்தர்கள். தற்போது இந்தியாவில் உள்ள பலமாநி லங்களில் இருந்து நேரடி ரயில் வசதி ராமேசுவரம் வரை உள்ளது.

SREE JANAKI TOURS
DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS
DOMESTIC & INTERNATIONAL

SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
● KOLLUR, UDUPI TOUR ● KERALA TEMPLE TOUR
● SHIRIDI, MANTRALAYAM ● NAVAGRAHA TOUR
● KASI, GAYA, ALLAHABAD & PURI ● AHOBILAM & HILL STATION

ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
● THIRUVANNAMALAI GIRIVALAM ● SRIPURAM GOLDEN TEMPLE
● SURUTAPALLI PRADASHOM ● SAKTHI TOUR
● THENNANGUR ● KANCHIPURAM & BALAJI DARSHAN

NEW 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092 (OPP JAINS KENCES RETREAT)
PHONE: 9094279625 / 9444465924 e-mail: srijanaki.tours@gmail.com

# அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோவில் தல வரலாறு

இமயத்தில் சிவபெருமானை உதாசீனம் செய்து விட்டுத் தக்கன் யாகம் செய்தார். தமது கணவனை அவமதித்த தங்கள் யாகத்தை தடுக்கச் சென்ற பார்வதி தேவியைத் தக்கன் அவமதித்து விட்டார். அதனால் பிராணத் தியாகம் செய்த பார்வதி தேவியின் உடலை, சிவபெருமான் தூக்கிக் கொண்டு அங்கும் இங்கும் அலைந்தார். இதனைப் பார்த்த திருமால் தமது சக்ராயுதத்தை ஏவி, பார்வதி தேவியின் உடலின் பாகங்களைத் துணித்தார். ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு பாகம் விழுந்தது. ஆவேசம் தணிந்த சிவபெருமான் மகா மயானமான காசிக்கு, மீதமுள்ள உடல் பாகத்தைக் கேதார நாத்திலிருந்து கொண்டு வந்தார். மகா மயானத்தில் பார்வதி தேவியின் உடலை அக்கினியில் இடமுனைந்தார்.

சிவபெருமான் பார்வதி தேவியின் காதில் தாரக மந்திரம் உபதேசம் செய்தார். அப்போது அவரது காதிலிருந்த காதணி எங்கேயோ விழுந்து விட்டதை அறிந்தார். அப்போது அங்கே திருமால் தமது சக்கரத்தால் ஒரு தீர்த்தக் கிணறு தோண்டி, அதனருகே அமர்ந்து சிவபெருமானை நோக்கி தவம் செய்து கொண்டு இருந்தார். சிவன் அவரை அணுகி பார்வதி தேவியின் காதணி பற்றிக் கேட்டார். திருமால் தாம் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகே உள்ள கிணற்றைச் சுட்டிக் காட்டினார். சிவபெருமான் அக்கிணற்றை எட்டிப் பார்க்கையில் அவரது காதிலிருந்த குண்டலமும் கிணற்றில் விழுந்து விட்டது. கிணற்றினுள்ளிலிருந்து பிரகாசமான பேரொளியுடன் ஒரு சிவலிங்கம் வெளிப்பட்டது. அந்தச் சிவலிங்கத்தில் சிவபெருமானின் சக்தியும் பார்வதி தேவியின் சக்தியும் ஒன்றாக ஐக்கியமாகி இருந்தது.

திருமால் அந்த ஜோதிர்லிங்கத்தை எடுத்து இத்தலத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். சிவ பெருமானை நோக்கித் தமது தவத்தை தொடர்ந்து மேற் கொண்டார். சிவபெருமான், திருமால் முன்பு விசுவரூபம் கொண்டு தோன்றினார். திருமால் விரும்பும் வரம் யாதெனக் கேட்க, அவர் இங்கு பிரதிஷ்டை செய்த ஜோதிர் லிங்கத்திலிருந்து எப்போதும் மக்களை ஆசிர்வதிக்க வேண்டினார். மேலும் சிவபெருமான் ஜடா முடியிலிருக்கும் கங்கை இத்தலத்தில் வந்து சிவபெருமானை அர்ச்சிப்பதுடன், இத்தலம் வந்து கங்கையில் நீராடும் மக்களுடைய பாவங்களைப் போக்க வேண்டும் எனவும், சிரார்த்தம் செய்தால் அவர்கள் பாவம் எல்லாம் விலகி புனிதம் அடைந்து சுவர்க்கம் போக வேண்டும் எனவும் வரம் வேண்டினார். சிவபெருமானும் அவர் கேட்ட வரம் தந்து, தாமும் அந்த லிங்கத்தில் ஒளியாக ஐக்கியமாகி இன்றும் மக்களுக்கு அருள் பாலிக்கின்றனர். திருமாலுக்கு விசுவரூபம் காட்டித் தந்தமையால், சிவலிங்கத்திற்கு விசுவநாதர் எனப்பெயர் உண்டாகியது.

திருமால் அந்த ஜோதிர்லிங்கத்தை எடுத்து இத்தலத்தில் பிரதிஷ்டை செய்து வழிபட்டார்.

பிரம்மாவே இங்கு யாகம் செய்தும், தவம் செய்தும் பிரம்ம பதவியைப் பெற்றார்.



அதன் பின்பு விசாலாட்சியாக அவதாரம் கொண்டிருந்த அன்னை பார்வதி தேவியை, சிவ பெருமானுக்குத் திருமால் திருமணம் செய்து வைத்தார். பிரம்ம தேவர் பல யாகங்கள் செய்து அவர்கள் திருமணத்திற்கு உதவி செய்தார். இவ்வாறு திருமாலின் வேண்டுதலின் படி ஜோதிர்லிங்கமாகத் தோன்றிய சிவன் விசுவநாதர் என வழங்கப் பட்டு வருகிறார். காசியைப் பற்றி ஏகப்பட்ட புராணக் கதைகள் உள்ளன. ஏனெனில் காசியம்பதி வேத காலம், புராண காலத்திற்கு முற்பட்டது. பல தேவர்களும், முனிவர்களும், மன்னர்களும், இங்கு தவம் செய்து பேறு பெற்றுள்ளார்கள். சூரியனின் புத்திரர்கள் எமனும், சனி பகவானும் சிவபெருமானை நோக்கி இப்பதியில் தவம் செய்து, எமன் தென்திசைக் காவலனாகவும், எமலோகத்திற்கு அதிபதியாகவும், பதவி பெற்றார். சனிதேவன் சிவபெருமான் அருளால் நவக்கிரகங்களில் ஒரு கிரகமாகப் பதவி பெற்றார்.

பிரம்மாவே இங்கு யாகம் செய்தும், தவம் செய்தும் பிரம்ம பதவியைப் பெற்றார் எனில், காசியின் மகிமையும் தொன்மையும் யாரால் எடுத்துக் கூற முடியும்?

சப்தரிஷிகள் என்னும் ஏழு ரிஷிகளும் இங்கு தவம் செய்து, சிவபெருமான் அருளால் நட்சத்திரப் பதவியடைந்துள்ளார்கள். காசியில் இரவு பூஜை சப்த ரிஷிகள் பூஜை என மிகவும் சிறப்பாக, தினசரி நடைபெறுவதால் இத்தலத்தை அவர்கள் தான் தாபித்தார்களோ என ஓர் எண்ணம் உண்டாகிறது. இராமபிரான் முன்னோர்களில் ஒருவரான ஹரிச்சந்திரன் வரலாறு அறியாதோர் இலர். அவர் விசுவாமித்திரர் சோதனைக்குட் பட்டு காசியில் வந்து சுடலையைக் காத்து, மனைவியைப் பிறர்க்கு விற்றுத் துன்பப் பட்டும், பொய்யே பேசாமல் முடிவில் சிவபெருமான் அருளால் இழந்த செல்வம் எல்லாம் பெற்று சுபிட்சம் அடைந்தார்.

இதி சாக காலத்தில் இராமர் இங்கிருந்து சிவலிங்கம் கொண்டு சென்று, இராமேசுவரத்தில் வைத்து வழிபட்டு, இராவணனை வதைத்த தோஷம் நீங்கப் பெற்றார் என இராமயணத்தில் வரலாறு காண்கிறோம்.

மகா பாரதக் காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் காசி வந்து வழிபாடுகள் செய்ததாகவும் மகா பாரதத்தில் வரலாறு கூறப் படுகிறது.

இன்னும் இப்படி எத்தனையோ புராணங்கள் காசிப் பதியைப் பற்றியுள்ளன. புராண காலத்தில் சத்தியபுரம் என்னும் ஊரில் பூரித்தியும்னன் என்பான் அரசாண்டு வந்தான். அவனுக்கு ஆயிரக்கணக்கான மனைவிகள். இன்பத்தில் மூழ்கியிருந்ததால் அவனால், அரசாட்சியை சரி வர கவனிக்க இயலவில்லை. இதனைச் சாதகமாக்கி அவனது விரோதிகள் அவனை நாட்டை விட்டுத் துரத்தி விட்டனர். விபாவரை என்னும் தமது பட்டத்து ராணியை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு, மன்னன் விந்திய மலைச் சாரலில் வந்து வாழ்ந்து வந்தான். வறுமையின் கொடுமையால் தன் மனைவியையே கொன்று விட்டான். அவள் மாமிசத்தை உண்ணப் போகும் போது, இரண்டு சிங்கங்கள் அங்கே வர பூரித்தியும்னன் ஓடி விட்டான். அப்படி அவன் ஓடும் போது அவன் எதிரே வந்த நான்கு பிராமணர்களைக் கொன்று தின்ன முற்பட்டான். அப்போது பிராமணர்களது கையிலிருந்த வேத ஏடுகள், மான்தோல் ஆசனம், அவர்கள் அணிந்திருந்த பூணூல் இவைகளைக் கண்டதாலும் தொட்டதாலும் அவனுக்குப் புத்தி தெளிந்தது.

பூரித்தியும்னன் தான் செய்த பெண் கொலை, பிராமணர் கள் கொலை இவைகளினால் பாவ ஆத்மாவாக ஆகி விட்டதை உணர்ந்தான். பிரம்மஹத்தி தோஷம் அவனைப் பற்றவே அவன் பெரும் சண்டாளன் ஆகிவிட்டான். காட் டில் அலைந்து சாகல்யா என்ற தவ முனிவரைக் கண்டு பாவ விமோசனம் கேட்டான். அந்த முனிவர் ஐந்து கருப்புத் துணிகளைக் கொடுத்து அவனை உடுத்திக் கொள்ளக் கூறினார். காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி விசுவநாதரைத் தரிசித்தால் பாவ விமோசனம் ஆகும் என்று கூறினார். அவனும் முனிவர் சொற்படி, காசிக்குச் சென் றான். அவன் காசி மண்ணை மிதித்ததும் ஒரு துணி வெண்மை ஆகி விட்டது. கங்கையில் மூழ்கி எழுந்தான். என்னே ஆச்சர்யம்! இறந்த அவனது மனைவி அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு உடன் எழுந்தாள். மற்றும் ஒரு கருப்பு ஆடை வெண்மை ஆகிவிட்டது. இரண்டு ஆடைகளையும் கங்கையில் அவிழ்த்து விட்டு மூன்று ஆடைகளுடன் கரையேறினான்.

இரண்டாவது அதிசயம்! இவனால் கொல்லப் பட்ட நான்கு பிராமணர்களும் கரையில் நின்று கொண்டு தம்பதிகள் இருவரையும் வரவேற்றனர். அவனது பாவம் தீர மந்திரம் ஓதி அட்சதை தெளித்தனர். மூன்றாவது ஆடையும் வெண்மை ஆகிவிட்டது. கணவன் மனைவி இருவரையும் மணி கர்ணிகா கட்டத்தில் அவர்கள் மூழ்கச் செய்தனர். நான்காவது ஆடையும் வெண்மை ஆகிவிட்டது. பின்பு விசுவநாதரைத் தொட்டு, பக்தியுடன் வழிபடக் கூறினர். அவ்விருவரும் அதன்படியே வழிபட, ஐந்தாவது ஆடையும் வெண்மை ஆகிவிட்டது. அவனது பாவங்கள் எல்லாம் நீங்கிப் புனிதன் ஆனான். விசுவநாதர் ஆலயத்தின் முன்பு அவர்கள் இருவரையும் அவனது எதிரிகள் அன்புடன் வரவேற்றனர்.

நாட்டிற்கு அழைத்துச் சென்று, அவனது அரசை அவனிடமே கொடுத்து, மீண்டும் பூர்த்தியும்னனை அரசனாக் கினர். எனவே கங்கையில் மூழ்கி காசி விசுவநாதரைத் தரி சித்தால் கொடிய பாவங்களும் நீங்கி விடும். எனவே தான் காசிக்கு விடும் பக்தர்கள், தம்பதிகளாக, இரு ஆடைகள் அணிந்து கங்கையில் மூழ்கி, ஓர் ஆடையை கங்கை நீரில் விட்டு விட வேண்டும் என்கின்றனர். கரைக்கு வந்து பிராமணர்களைத் தரிசித்து அவர்களுக்கு தானம் வழங்க வேண்டும் என்றும் கூறுவர். விசுவநாதர் ஆலயம் சென்று விசுவநாதரைத் தொட்டு வழிபட வேண்டும் என்றும் இங்கே கூறுகின்றனர். அவ்வாறு செய்தால் தான், நாம் நம்மையும் அறியாமல் செய்த பாவங்கள் கூட விலகும் என்கின்றனர்.

இவ்வரலாற்றினால் நாம் கங்கை நீராடும் முறைக்கு விளக்கம் அறிகின்றோம்.

மகாபலி சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண் தானமாகக் கேட்ட நாராயணன், திருவிக்கிரமராக ஓங்கி வளர்ந்து உலகளந்து விட்டு, மற்றொரு காலை தேவலோகம் வரை நீட்ட, ஆகாச கங்கை நீர் கொண்டு பிரம்மா அத்திருப்பாதத்தைக் கழுவிப் பூஜித்தார். அப்போது பெருக்கெடுத்து ஓடிய கங்கை நீரைச் சிவபெருமான் தன் சடையில் தாங்கிப் பூமியில் விட்டார். அந்த கங்கையே காசியில் புனிதத் தீர்த்தமாக விளங்குகிறது என்கின்றனர்.

சிறப்பம்சம்: அதிசயத்தின் அடிப்படையில்: இந்தியாவில் 12 ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் காசியே முதன்மையானது, அம்மனின் சக்தி பீடங்களில் இது மணிகர்ணிகா பீடமாகும். இங்குள்ள மூலவர் மரகதத்தால் ஆனவர் என்பது தனி சிறப்பு.



அனைவருக்கும் இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்



இறைபணியில் P. முருகேசன் உரிமையாளர்
சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்
186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588




மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

181 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன

31.10.2024 சிறப்பிதழ்





ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

•••

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

•••

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# காசியில் வீற்றிருக்கும் சக்தி பீடங்களும் பன்னிரு ஜோதிர் லிங்கங்களும்

அனைத்து இந்துக்களும் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது காசிக்குச் செல்வதை மிகவும் புண்ணியமாக கருதுகின்றனர். காசி யாத்திரையில் மூன்று இடங்களில் சடங்குகள் நடத்தப் படுகின்றன. ப்ரயாக்ராஜ், காசி மற்றும் கயா ஆகியவை இதில் ஈடுபட்டுள்ளன. காசியில் பொதுவாக செய்யப்படும் சடங்குகள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



1. மகா பிராயச்சித்தம்.
2. மகா சங்கல்பம்
3. மணிகர்ணிகா ஸ்நானம்
4. பஞ்சகட்ட பிண்டம்
5. கங்கா பூஜை/தம்பதி பூஜை
6. விஸ்வநாத அபிஷேகம்
7. அன்னபூர்ணா /விஷாலாக்ஷி அர்ச்சனை
8. கால பைரவ சமாராதனை
9. கபீர் நகர் காலனிக்கு செல்லும் வழியில் துர்க்கை கோயிலுக்கு எதிரே அமைந்துள்ள பஞ்ச கவுடி மாதா கோயில் வழிபாடு.

மேலே உள்ள சடங்குகள் பொதுவாக 23 நாட்கள் ஆகலாம். மூன்று நாட்கள் சிறந்ததாக இருக்கும், மேலும் 2 நாட்கள் மட்டுமே ஒதுக்கப்பட் டால், சில சடங்குகள் குறைக் கப்பட நேரிடும்.காசி காண்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள, காசியில் தற்போதும் அன்பர்கள் தரிசிக்கக்கூடிய தீர்த்த கட்டங்கள்

## பாதோதக தீர்த்தம்

சிவபெருமான் அறுபத்து நான்கு யோகினி களை காசியில் குழப்பத்தை ஏற்படுத்தஅனுப்பி னார், அவர்கள் திரும்பி வராததால், அவர் சூரிய னையும், பின்னர் பிரம்மாவையும் விநாயகரையும் அனுப்பினார். இந்த தெய்வங்கள் திரும்பி வராத தால், சிவபெருமான் அதே பணியை நிறைவேற்ற பகவான் விஷ்ணுவை காசிக்கு அனுப்பினார்.

சிவபெருமானிடமிருந்து இத்தகைய தெய்வீக அறிவுறுத்தல்களைப் பெற்றதில் விஷ்ணு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

சிவபெருமானை வேண்டிக் கொண்டுமகா லட்சுமி தேவியுடன் கருட வாக னத்தில் பயணித்து காசியை அடைந்தார். காசிக்குச் செல்வதற்கு, சரியான முகூர்த்தத்திற்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. காசியில் அனைத்து நேரமும் நல்ல நேரம்தான்.

காசியை அடைந்ததும் மகாவிஷ்ணு காசிக்கு வந்து க்ஷேத்திரம் முழுவதையும் அகன்ற கண்களுடன் பார்த்தார். பின்னர் அவர் புனித நதியான வருணா கங்கை நதியுடன் சேரும் இடத்திற்குச் சென்று கை, கால்களைக் கழுவினார்.

விஷ்ணுவின் சரண (மரியாதையுடன் குறிப்பிடப் படும் பாதங்கள்) கழுவப்பட்ட இடம் பாதோதக தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. ஸ்கந்த புராணம், காசி காண்டம், அத்தியாயம் 58 இன் படி, பாதோதக தீர்த்தத்தில் நீராடும் பக்தர்களின் தற்போதைய வாழ்க்கை உட்பட 7 பிறவிகளில் திரட்டப்பட்ட அனைத்து பாவங் களும் நீங்கும்.

இங்கு சிரார்த்தம் செய்யும் ஒரு பக்தர், தனது முன்னோர்களின் இருபத்தி ஒரு தலைமுறைக்கு சேவை செய்கிறார் காசியில் உள்ள பாதோதக தீர்த்தத்தில் சிரார்த்தம் செய்வது கயாவில் சிரார்த்தம் செய்வதற்குச் சமம். பாதோதக தீர்த்தத்தில் புனித நீராடி, பாதோதக நீரைப் பருகி, மற்றவருக்குப் பாதோதக நீரைக் கொடுக்கும் ஒரு பக்தன் மகாவிஷ்ணுவால் ஆசிர் வதிக்கப்படுவான், அவன் நரகத்தைச் சந்திக்க மாட்டான். சரண் அமிர்தம் (விஷ்ணுவின் தாமரை பாதங்களில் இருந்து வரும் அமிர்தம்) என்ற பாதோதக தீர்த்தத்தின் நீரை உட்கொள்ளும் ஒருவருக்கு இந்த உலகில் மறுபிறப்பு பற்றிய பயம் தேவை யில்லை.

பக்தர்கள் சங்கில் பாதோதக தீர்த்தம் எடுத்து இறைவனுக்கு அபிஷேகம்

செய்து அத்தகைய நீரைப் பருகுமாறு காசி காண்டம் அறிவுறுத்துகிறது. அத்தகைய பக்தர்களுக்கு அபமிர்த்ய அகால மரணம்) பற்றிய பயம் இருக்காது மேலும், அவர்களின் நல்ல செயல்களுக்காக அவர்கள் எப்போதும் நினைவுகூரப்படுவார்கள்.

பாதோதக தீர்த்தம் எந்த ஆறு அல்லது குளத்தின் வடிவத்திலும் தற்சமயம் இல்லை இருப்பினும், திரிலோச்சனேஸ்வரர் கோவில் வளாகத்திற்குள் ஒரு பாதோதக் கூப் (கிணறு) உள்ளது ஒரு கட்டத்தில் கிணறு அமைக்கப்பட்டு அங்கு ஒரு கை பம்ப் பொருத்தப்பட்டுள்ளது. தணணீர் மிகவும் தூய்மையாகவும் சுத்தமாகவும் இருக்கிறது.

இங்கு ஒரு விஷயத்தை குறிப்பிட வேண்டும். காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் பல: யுகங் களுக்கு முந்தையவை அனேகமாக அக்காலத்தில் வருணா நதி மிகவும் அகலமாக இருந்திருக்கலாம் மேலும் ஒரு பரந்த நிலப் பரப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும் தற்போது, இந்த நதி மிகவும் குறுகலாக உள்ளது மற்றும் திரிலோச்சனேஷ்வரிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. தற்போது ஓடைபோல் காட்சி யளிக்கிறது.

த்ரிலோச்சனேஷ்வரரை தரிசிக்கும் பக்தர்கள் பாதோதக கிணற்றிலிருந்து வரும் தண்ணீருக்கு தெய்வீக மரியாதையுடன் பருகுகிறார்கள். புருஷோத்தம மாசம் மற்றும் அக்ஷய திரிதியா நாளில், மக்கள் அதிக எண்ணிக் கையில் இந்த கோவிலுக்கு வருகை தந்து, பாதோதக கிணற்றில் இருந்து சரண் அமிர்தமாக தண்ணீரை உட் கொள்கின்றனர்.

## காசியில் உள்ள பல்வேறு சக்தி பீடங்கள்

ஸ்கந்த புராணம், காசி காண்டம், அத்தியாயம் 79 பல்வேறு சக்தி பீடங்களைக் குறிப்பிடுகிறது. பக்தர்களின் கவனத்திற்காக. மற்ற தலங்களில் வழிபடுவதை விட இந்த சக்தி பீடங்களில் ஒரு பக்தன் வழிபட்டால் பல மடங்கு நன்மைகளைப் பெறுவான் என்றும் இங்கு குறிப் பிடுகி றோம். வாரணாசி/காசியில் கீழக்கண்டவாறு பல பீடங்கள் (மற்றும் அருகாமையில் உள்ள தெய்வங்கள்) உள்ளன:

| | |
|---|---|
| விரஜா பீடம் | திரிலோச்சன், நர்மதேஸ்வரர், காமேஸ்வரர் |
| மஹா பீடம் | ஆதி மஹாதேவ். பார்வதீஸ்வரர், மோதக பிரிய விநாயகர் |
| ஆதி கேசவ பீடம் | ஆதி கேசவ், வருண சங்கமேஸ்வரர், நக்ஷத்ரேஸ்வரர் |
| மங்கள் பீடம் | மங்கள் கௌரி கோவில் பகுதி மற்றும் பிந்து மாதவ கோவில் பகுதி |
| பஞ்ச முத்ரா மஹா பீடம் | ஆத்ம வீரேஸ்வரர், காத்யாயனி, சங்கடா தேவி |
| சித்தேஸ்வரி பீடம் | சித்தேஸ்வரி தேவி, சந்திரேஸ்வரர் |
| மஹாலக்ஷ்மி பீடம் | மகாலக்ஷ்மி கோவில், லட்சுமி குண்ட் பகுதி |
| தர்ம பீடம் | தர்மேஸ்வரர். விஸ்வபூஜ கௌரி, விசாலாக்ஷி கௌரி மற்றும் பிறதெய்வங்கள் |
| பீஷ்ம சண்டி பீடம் | சண்டி தேவி சண்டீஸ்வரர் |
| துர்கா பீடம் | துர்கா கோயில் மற்றும் பிற தெய்வங்கள் |
| காளி பீடம் | கல்ராததிரி கோவில் சுக்ரேஸ்வரர் |
| காமாக்யா பீடம் | காமாக்யா (காமாக்ஷி) கோவில் |
| கிருத்தி வாசா பீடம் | கிருத்தி வாசேஸ்வரர், மிருத்யுஞ்சய மஹாதேவ், மஹா காலேஸ்வரர் |

## காசியில் உள்ள ஜோதிர் லிங்கங்கள்

அகில இந்திய அளவில், பன்னிரு ஜோதிர் லிங்கங்கள் உள்ள கோவில்கள் உள்ளன.

காசி யிலும் பன்னிரு சக்திவாய்ந்த லிங்கங்கள், ஜோதிர் லிங்கங்களாக பூஜிக்கப் படுகின்றன. பல சிவ பக்தர்கள் காசியில் விசேஷ தினங் களில் துவாதச ஜோதிர் லிங்க யாத்திரை மேற் கொள் கின்றனர்.

| அகில இந்திய அளவில் | புனித காசி நகரத்தில் |
|---|---|
| ஸோம்நாத், சௌராஷ்டரம் | ஸோமேஸ்வரர், மான் மந்திர் காட் |
| மல்லிகார்ஜுனர், ஸ்ரீசைலம் | த்ரிபுராந்தகேஸ்வரர், ஸிக்ரா |
| மஹா காலேஸ்வரர், | உஜ்ஜயினி மஹா காலேஸ்வரர், தாரா நகர். |
| ஓங்காரேஸ்வரர் (இந்தூர் அருகில்) | ஓங்காரேஸ்வரர், மசோதரி பின்புறம் |
| பைஜ்நாதர் (மஹாராஷ்ட்ரா/ஜார்கண்ட்) | பைஜ்நாதேஸ்வரர், காமாச்சா |
| பீமா சங்கர், நாசிக் பூனா சாலையில் | பைஜ்நாதேஸ்வரர், காமாச்சா |
| ராமேஸ்வரர் (தமிழ் நாடு) | கணேஸ்வரர் (ராமேஸ்வரர்) மான் மந்திர் காட் |
| நாகேஸ்வரர் (மஹாராஷ்டரா) | நாகேஸ்வரர், போசலா காட் |
| விஸ்வேஸ்வரர் வாரணாசி | விஸ்வேஸ்வரர் வாரணாசி |
| த்ரயம்பகேஸ்வரர் (நாசிக்) | த்ரயம்பகேஸ்வரர் (கோடோவ்லியா) |
| கேதாரேஸ்வரர் (உத்தராகண்ட்) | கேதாரேஸ்வரர் (கேதார் காட்) |
| கிரிஸ்னேஸ்வரர் (மஹாராஷ்டிரா) | கிரிஸ்னேஸ்வரர், காமாக்யா தேவி கோவில் |

– கட்டுரையாளர் பி.எஸ்.வெங்கடரமணன்

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை ஆன்மிகமலர்.காம் மெயில் புத்தகத்தில் தொடராக எழுதி வருகிறார்.



இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தொலைபேசி எண்: 9839061178


ஆன்மிகமலர்


வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
மக்களின் நன்மதிப்பை பெற்ற
செல்: 9025161717
ராம் சாய் ஹோட்டல்
(சைவம்)
எங்களிடம் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில்
சைவ உணவுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
G.H. ரோடு மற்றும் கேணிக்கரை, இராமநாதபுரம்.

aanmeegamalar.com







# மஞ்சள், பச்சை, சிவப்பு ஆடை அணிந்து வழிபட்டால் நினைத்ததை நிறைவேற்றித் தரும்





## ஜெய் ஸ்ரீ அகோர காளி அம்மன் ஸ்ரீ அகோர வராஹி அம்மன் திருக்கோவில்

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் இருந்து மதுரை ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலையில் இருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள் ளது.

கீழவெள்ளூர் பச்சை பசேல் என வயல் வெளிகளுடன் இயற்கை சூழல் நிறைந்த இடத்தில் உள்ளது பக்தர்கள் மனமுருகி கேட்ட வரங்களை தரும் ஸ்ரீ ஜெய் அகோரகாளிஅம்மன் ஸ்ரீ வாராஹி அம்மன் திருக்கோவில்.

இக்கோவிலில் பஞ்சமுகவிநாயகர், ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன், ஸ்ரீ பழனி ஆண்டவர், ஸ்ரீ நாகம்மாள் நாகராஜா, ஸ்ரீ வேட்டை மகாராஜா முனீஸ்வரர் மற்றும் ஸ்ரீல ஸ்ரீ மார்கண்டேய சித்தர் போன்ற சன்னதிகள் பிரம்மாண்டமாக உள்ளது.



இக்கோவில் ஸ்தல வரலாறு பற்றி கோவில் ஸ்தாபகர் காளி உபாசகர் ஸ்ரீ ஸ்ரீ மணிகண்டேஸ்வர சுவாமி கூறியதாவது

சிறுவயதில் இருந்தே காளி மீது தீவிர பக்தி கொண்ட நான் தியான வழிபாடு செய்யும் போது அருள்வாக்கில் அழிந்த பிரபஞ்சத்தின் கீழ் நான் குடிகொண்டு உள்ளேன் எனக்கு கோவில் எழுப்ப வேண்டும் என எனது அருள் வாக்கில் கூறியபடி நான் கடந்த 2015 ஆண்டில் இங்கு ஏராளமான காளி பக்தர்களின் துணையோடு ஜெய் அகோர காளி அம்மன் அகோர வாராஹி அம்மன் கோவில் அமைத்து உள்ளேன்.

காளி அருள் வாக்கின் படி அமாவாசை சிறப்பு மகா யாகம் நடத்தப்பட்டு அன்னதானம் நடைபெற்று வருகிறது. ஆடிதிருவிழா விமர்சையாக நடைபெறும். பக்தர்கள் இக்கோவிலில் வந்து மனமுருகி வழிபாடு செய்வதால் கேட்ட வரம் கிடைக்கும்.

மஞ்சள் ஆடை அணிந்து வந்து வழிபாடு செய்தால் திருமணத்தடை மற்றும் சுபகாரியங்கள் நடைபெறும். பச்சை ஆடை அணிந்து வந்து வழிபாடு செய்தால் நினைத்த காரியங்கள் கைகூடும்.

செல்வம் பெருகி லட்சுமி கடாட்சம் கிட்டும். சிவப்பு ஆடை அணிந்து வந்து வழிபாடு செய்தால் பில்லி சூன்யம் ஏவல் எதிரிகள் தொல்லைகள் தீராத வியாதி நீங்கி மன நிம்மதி கிடைக்கும்.

ஜெய் ஸ்ரீ அகோர காளியை மாதம் தோறும் வரும் அமாவாசை தினத்தில் நடைபெறும் மகா யாகத்தில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்வில் நிம்மதி அடைய வேண்டும் என கூறினார் தீபாவளி அமாவாசை சிறப்பு யாகம் நடைபெறவிருக்கிறது.



# தேவரின் பிறப்பை முன்கூட்டியே கணித்த சித்தர்

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பிறப்பை கூறிய கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தை சேர்ந்த உக்கிர பாண்டி தேவருக்கும் இந்திராணி அம்மையாருக்கும் நீண்ட நாட்களாக குழந்தை இல்லை தம்பதிகள் இருவரும் மாரநாடு கருப்பன சாமி கோவிலில் மாசி களரி விழாவிற்கு சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு கருப்பனேந்தல் மடம் வழியாக வில் வண்டியில் வந்து கொண்டு இருந்தனர்.



அப்போது தம்பதிகள் இருவரும் கருப்ப னேந்தல் மடத்தில் தியானத்தில் இருந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமியை தரிசிக்கின்றனர்.

அப்போது கண் விழித்த சுவாமிகள் அவர்களை பார்த்த உடன் 56 ஊர்களுக்கு சொந்தகாரர்கள் நீங்கள் இந்த சாதாரணமான வரை தேடி வந்து இருக்கிறீர்கள் என்று சொன்னவுடன் தம்பதிகள் இருவரும் எங்களுக்கு பிள்ளை வரம் வேண்டும் என கேட்டனர் சற்று நேரம் கண் மூடி தவ நிலையில் இருந்த சுவாமிகள் புன்னகையுடன் கண் திறந்து உங்களுக்கு ஊர் போற்றும் பிள்ளைதான் வேண்டுமா எனக் கேட்டார்.

அவர்கள் இருவரும் எங்களுக்கு ஊர் போற்றும் பிள்ளை தான் வேண்டும் என்ற தெரிவித்த உடன் அவர்ளை பார்த்து தேவரே உங்களின் மனைவியின் வயிற்றில் ஒரு முத்து இருக்கிறது அது அடுத்த வருடம் குழந்தையாக பிறக்க போகிறது அந்த முத்து ஊர் அல்ல உலகம் போற்றும். அதனால் அந்த குழந்தைக்கு என் ஆதி குரு நாதர் ஞான சித்தர் ராமலிங்கம் பெயரையும் சேர்த்து வையுங்கள் என கூறி ஆசி வழங்கினார்.

மாயாண்டி சுவாமிகள் கூறிய படியே அடுத்த ஆண்டே ஆண் குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு சுவாமி கூறிய படியே முத்துராமலிங்கம் என பெயரிட்டு மகிழ்ந்தனர்.

அந்த குழந்தை தான் தேசியத்தையும்,தெய் வீகத்தையும் தனது இரு கண்களாக கொண்ட இந்தியா வில் புகழ்பெற்ற பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஆவார்.




ஸ்ரீ அகோர காளி அம்மன்
ஸ்ரீ அகோர வராஹி
அம்மன் திருக்கோவில்
கீழவெள்ளூர் திருப்புவனம்
வழி சிவகங்கை மாவட்டம்





ஆன்மிக அன்பர்களுக்கு வணக்கம், பில்லி, சூன்யம், ஏவல் போன்றவற்றில் விடுபட வாழ்வில் அனைத்து சுப பலன்களை பெற்று நிம்மதி அடைய, தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, எதிரிகளல் தொல்லை நீங்க, வாழ்வில் ஒருமுறை ஸ்ரீ அகோர காளி அம்மன், ஸ்ரீ அகோர வராஹி அம்மனை பச்சை மஞ்சள் சிவப்பு ஆடை அணிந்து மனமுருகி வழிபட்டு பிரதி மாதம் திருக்கோவிலில் நடைபெறும் அமாவாசை மகா யாகத்தில் பங்கு பெற்று பலன் அடையுங்கள்.

ஸ்ரீ அகோர காளி உபாசகர் அருள்வாக்கு சித்தர்
ஸ்ரீ ஸ்ரீமணிகண்டன்ஸ்வாமி சக்திபீடம், கீழவெள்ளூர்,
ஆலய தொடர்புக்கு 9047829016

# உலகத்திலேயே முதலில் தோன்றிய சிவாலயம்

உலகிலேயே முதன் முதலில் தோன்றிய கோவில் என போற்றி புகழப்படும் சிவபெருமான் வீற்றிருக்கும் புனித தலங்களில் ஒன்றான உத்திரகோசமங்கை.

ஆண்டவனின் அடி முடி எப்படி அறிய முடியாததோ அப்படித்தான் இந்தக் கோவிலின் பெருமையும், சிறப்பும்.

திருவாரூரில் பிறந்தால் முக்தி, காசியில் இறந்தால் முக்தி. அண்ணாமலையை நினைத்தால் முக்தி என்பார்கள். இங்கே உத்தர கோச மங்கை மண்ணை மிதித்தாலே முக்தி.

ஆர் அறிவார்
எங்கள் அண்ணல் பெருமையை
ஆர் அறிவார் இவர் அகலமும் நீளமும்
பேர் அறியாத பெருஞ் சுடர் ஒன்று அதன்
வேர் அறியாமல் விளம்பு கின்றேனே

இதுவே உலகிலேயே முதன் முதலில் தோன்றிய சிவன் கோவில் என நம்பப்படுகிறது.

ஆதி காலத்தில் அதுவும் நவக்கிரகங்கள் அறியப்படாத காலத்தில் இருந்த சூரியன், சந்திரன், செவ்வாய் மட்டுமே இங்கு கிரகங்களாக உள்ளது, இதிலிருந்தே இந்த ஆலயம் மிக மிகப் பழமையானது என்பதை அறியலாம்.

சிவபெருமான் பார்வதிதேவிக்கு வேதாக மங்களின் ரகசியங்களை உபதேசம் செய்த இடம் இதுவாகும்.

உத்திரன் (ருத்திரன்) + கோசம் + மங்கை. மங்கைக்கு உத்திரன் உபதேசம் செய்த இடம், ஆதலால் உத்திரகோசமங்கை என் றானது. இத்தல மூலவர் 'மங்களநாதர்' சுயம்புவாக, இலந்தை மரத்தடியில் தோன்றியவர்.

இங்கு மூன்று மூர்த்தங்கள்

மங்களேச்சுவரர், மங்களேசுவரி, ஆடல்வல்லான், மூர்த்தியும் இங்கே (நடராசர்) மரகதப் பச்சை, தீர்த்தமும் இங்கே பச்சை, விருட்சமும் இங்கே பச்சை. என்ன ஒரு ஒற்றுமை பாருங் கள்.

கோவிலின் தொன்மை நம்மை வியக்க வைக் கிறது.



மகா பாரதப் போர் 5100 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந் தது. (கிமு 3100) அப்போதுதான் பரீஷீத்து மகராசன் காலத்தில் கலிகாலம் பிறந்தது. அந்தக் காலத்தில் இந்தக் கோவில் இருந்திருக்கிறது.

அதற்கும் முந்தியது இராமாயணக் காலம் இலங்கேசுவரன் இராவணன் இங்கே வந்து வணங்கிச் சென்றிருக்கிறான்.. இங்குள்ள மங்களேச்சுவரர் மண்டோதரிக்கு அருளியவர்.

உலகிலேயே மிகச்சிறந்த சிவ பக்தனைத் தான் திரு மணம் முடிப்பேன் என்று காத்திருந்தாள் மண்டோதரி. இதனால் அவளுக்கு நீண்ட நாட்களாக திருமணம் ஆகாமல் இருந்தது.

பின்பு இத்தல ஈசனையும், அம்பா ளையும் மண்டோதரி வழிபட்டாள். அதன்பிறகே ராவணனை கரம் பிடித்தாள்

மேலும் ராவணன் – மண்டோதரி திருமணம் இத் தலத்திலேயே நடைபெற்றது என்று கூறப்படுகிறது.

இங்குள்ள அர்ச் சகர் கூற்றுப்படி இராவணனுக்கும், மண்டோதரிக்கும்




உ
ஸ்ரீ ஆதிகோரக்கி நாதர் துணை
98654 98333
KMANIS
மணி நாட்டு மருந்து கடை
எல்லா விதமான நாட்டு மருந்துகள்,
முகத்தில் வரும் கருப்பு, கருவளையம்
முகப்பொழிவுக்கு சிறந்த ஆயுர்வேத கிரீம்கள்,
ஆண்மை சம்மந்தமான பொருள்கள்
குதிங்கால்வலி,முழுங்கால் வலிகளுக்கு
சிறந்த ஆயுர்வேத மருந்துகள் கிடைக்கும்.
வாடிக்கையாளர்களே உள்ளே வந்து SELF SERVICE மூலம் பொருட்களை வாங்கி கொள்ளலாம்
12, அரண்மனை, ராஜவீதி, பார்வதி நெய்கடை, பீம விலாஸ் அருகில், இராமநாதபுரம்.
KMANIS
மணி நாட்டு மருந்து கடை
சித்தா ஆயுர்வேதா யுனானி
12 அரண்மனைவீதி, இராமநாதபுரம்
KMANIS HEALTH CARE INDIA

நடந்த திருமணமே மங்களேச்சுவரர் சன்னதியில் தான் நடந்ததாம். மங்களேச்சுவரரே அதை முன்னின்று நடத்திய தாகவும் நம்பப் படுகிறது.

இராவணனைப் போல சிவ பக்தனைப் பார்க்கவே முடி யாது. இந்த ஊர் மங்களேசுவரராகிய சிவபெருமான் இராவணன் கையில் பால சிவனாகத் தவழ்ந்த கதையும் ஒன்று உண்டு. ஆக அவன் காலத்திலும் இந்தக் கோவில் இருந்திருக்கிறது.

வலை வீசி விளையாண்ட படலம் கேள்விப் பட்டிருக் கிறீர்களா என்று கேட்பதை விட ஏ.பி.நாகராசனின் திரு விளையாடல் சினிமாப் படம் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டால் உங்களுக்கு நன்றாக விளங்கும். அதில் வரும் கடைசிக் கதைதான் இந்த வலைவீசி விளையாண்ட படலம்.

அது நிகழ்ந்த இடம் வேறெங்கும் இல்லை இங்கே தான்...

இங்கே இப்போது கோவில் வாசல் உள்ள இடத்தில்தான கடல் இருந்தது. இப்போது அதே கடல் பின் வாங்கிப் பின்வாங்கி ஏர்வாடிப் பக்கம் போய்விட்டது இங்குதான் சிவ பெருமான் வலைவாணனாக உருவெடுத்து வந்து சுறாவை அடக்கினார்.

அவர் மணந்த கொண்ட மீனவப் பெண்தான் மங்களேசுவரி

இப்போது நமக்கு அருள் பாலிக்கும் அம்மன். அவளுக்கு இறைவன் ஆனந்த தாண்டவத்தை அறையில் ஆடிக் காட்டினார். பிரணவ மந்திரத்தின் பெருளை உபதேசமும் செய்தார். உத்திரம் என்பது உபதேசம். கோசம் என்பது இரகசியம் அதாவது பிரணவ மந்திரம். மங்கைக்கு உபதேசித்ததால் இந்த இடம் உத்தர கோசமங்கை ஆனது.

இதுதான் கோவில் உருவான வரலாறு.

கோவில் அமைப்பு

முதல் பிரகாரத்தின் வாயு மூலையில் தனது தேவியருடன் முருகப்பெருமான் நின்ற கோலத்திலும், இரண்டாம் பிரகாரத்தின் வாயு மூலையில் ஆறு திருமுகம், பன்னிரு கைகளுடன் இரு தேவியர் சூழ, மயில் மீது அமர்ந்த கோலத்திலும் காட்சி தருகிறார்.

ஆலயத்தின் முகப்பில் இரு கோபுரங்கள் உள்ளன. வலதுபுறம் உள்ள கோபுரம் ஏழு நிலைகளுடன் எழிலாக தோற்றம் கொண்டுள்ளது. மேலும் பொதுவாக எந்தச் சிவாலயங்களிலும் பூக்களைச் சார்த்தி வழிபடும் போது சாபம் பெற்ற ஒரு பூவை மட்டும் ஒதுக்கி விடுவார்கள் அதுதான் தாழம் பூ.

நான் முகன் முடி கண்டதாய் பொய் சொன்ன அதே பூ, நான் முகனுக்கு வழிபாடு அற்றுப் போனது போல் சிவலிங்கத்தின் மேல் சாத்தப்படும் உரிமையை இழந்த அதே பூ இங்கு மட்டும் தாழம் பூ சாத்தும் வழக்கம் அற்றுப் போகமல் இன்றும் தொடர்கிறது,

பொய் உரைத்தோர்களையும் மங்களேச்சுவரர் மன்னிப்பார் என்பதைக் காட்ட மட்டும் அல்ல,

பிரமனும் பெருமாளும் அடி முடி தேடியது எந்த யுகம் அதற்கும் முன்னே இந்தக் கோவில் இருந்திருக்கிறது என அதன் தொன்மையை காட்டவும்தான். இடதுபுறம் உள்ள கோபுரம். மொட்டையாக காணப்படுகிறது.

நடராசருக்கு வருடம் ஒரு முறை மட்டுமே இங்கு அபிஷேகம் செய்யப்படும்.அன்று மட்டும் அவரைக்களைந்த திருக் கோலத்தில் தரிசிக்கலாம். அதுதான் மார்கழித் திங்கள் அன்று வரும் திருவாதிரை மீதி நாட்களில் பூரா அவர் சந்தனக் காப்பிட்ட கோலத்தில் தான் இருப்பார். மார்கழி மாத திருவாதிரை க்கு முதல் நாள் பழைய சந்தனம் களையப் படும். 32 வகை அபிஷேகங்கள் அதி அமர்க் களமாக நடக்கும். அன்று இரவே புதிய சந்தனம் சாத்தப் படும்.


ஆண்டு முழுக்க ஆடல் வல்லான் திரு மேனியில் அப்பி இருந்த சந்தனம். களையப் பட்ட பின் அதைப் பெற பக்தர்களிடம் ஆவலும் போட்டாப் போட்டியும் அதி கம். எங்கும் போலவே இங்கும் போலிகளைக் கண்டு ஏமாறா தீர்கள்! இந்தச் சந்தனம் மருத்துவக் குணம் கொண்டது. அனைத்து நோய்களையும் தீர்க்க வல்லது என பக்தர்கள் நம்புகின்றார்கள்.

பொதுவாக ஆலயங்களுக்குச் சென்றால் ஒரு நாள் ஒருமுறை சென்று வணங்கிவிட்டு வந்து விடுவோம்.

ஆனால் ஒரே நாளில் மூன்று வேளையும் சென்று தரிசித்து பலனை அடையும் கோவிலாக உத்திரகோசமங்கை திருத்தலம் உள்ளது இக்கோவிலின் சிறப்பம்சமாகும்.

இத்தலத்திற்கு எப்படி செல்வது....

மதுரை இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில்; பரமக்குடி, சத்திரக்குடி முதலியவற்றைத் தாண்டி, (இராம நாதபுரத்திற்கு 10 கி.மீ. முன்பாகவே) வலப்புறமாக பிரிந்து செல்லும் தூத்துக்குடி திருச்செந்தூர் சாலையில் சென்று, உத்தரகோசமங்கை இருப்புப்பாதை சந்திக் கடவைத் தாண்டி, 7கி.மீ. சென்றால் இத்தலத்தையடையலாம். சாலை பிரியுமிடத்தில் கோயில் பெயர்ப் பலகையுள்ளது. கோயில் வரை வாகனங்கள் செல்லும்.




aanmeegamalar.com

# திருமணத்தில் ஏழுமலையான் ஆசி வேண்டுமா?

# திருமணப் பத்திரிகையை ஏழுமலையானுக்கு அனுப்புங்கள்

உங்கள் வீட்டில் திருமணம் நிச்சயமாகி யுள்ளதா, பத்திரிகையை திருப்பதி திருமலை வெங்கடாஜலபதிக்கு அனுப்பிவையுங்கள், ஏழு மலையானின் ஆசியுடன் உங்கள் முகவரிக்கு பிரசாதம் வந்து சேரும், ஏழுமலையானின் ஆசியையும் பிரசாதத்தையும் எவ்வாறு பெறுவது என்பதை எளிமையாக பார்ப்போம்.



திருமண பத்திரிக்கையை ஒரு மாதம் முன்பு திருப்பதி கோயிலுக்கு

**SRI LORD VENKATESWARA SWAMY,**
The Executive Officer
TTD Administrative Building
K.T.Road, Tirupati - 517501

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

திருப்பதி கோவிலில் இருந்து, நீங்கள் அனுப்பி வைக்கும் முகவரிக்கு, பிரசாதம் அனுப்பி வைக் கப்படும்.

தம்பதிகள் கையில் கட்டிக் கொள்ளும் கங் கணம் குங்குமம் மஞ் சள் அனுப்பி வைக்கப்படும். திருமண முக்கியத்துவத்தை சொல்லும் ஒரு புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

பலருக்கு இந்த நடைமுறை தெரிவதில்லை. உங்களுக்கு தெரிந்தவர்கள், உறவினர்களுக்கு இந்த நடைமுறையையும், கோவில் அலுவலக முகவரியையும் தெரியப்படுத்தினால், திருப்பதி பெருமாளின் ஆசியுடன், கல்யாண பத்திரிக் கையை சுவாமிக்கு சமர்ப்பித்த நிம்மதியும் கிடைக்கும்.

## திருமலையில் அங்கப்பிரதட்சனம்

இதே போன்று திருப்பதியில் அங்கப்பிரதட் சனம் செய்ய நிறைய பக்தர்கள் விரும்புவார்கள்.

ஆனால், இதற்கான நடைமுறைப் பற்றி தெரியாமல் விழிப்பார்கள். இதுபோன்ற பக்தர் களுக்கு உதவுவதற்கான வழிமுறையும் உள்ளது.


அங்கப்பிரதட்சனம் செய்ய விரும்பும் பக்தர்கள், அங்கபிரதட்சனம் செய்வதற்கு முதல் நாள், நண்பகல் 12 மணியிலிருந்து விஜயா பாங்கில் டிக்கெட் கிடைக்கும், இதை கோவில் அலுவலர்களே கொடுப்பார்கள், இதிலும் ஒரு கட்டுப்பாடு உள்ளது.

ஒருநாளைக்கு மொத்தம் 750 டிக்கெட் மட்டுமே வழங்கப்படும், பெண்கள் 350 ஆண்கள் 400 மட்டுமே வழங்கப்பட்டது.

தற்போது இதுகுறித்த தகவலை விஜயா வங்கியில் விசாரிக் கலாம். இந்த அங்கப்பிரதட்சனம் செய்வதற்கு எந்தவித கட்டணமும் கிடையாது.

முற்றிலும் இலவசமாகவே கோவில் நிர்வாகம் இந்த வசதியை செய்து கொடுக்கிறது.


ஸ்ரீ மகா பெரியவா பூஜா பிராடக்ட்



பஞ்சகவ்ய பசுஞ்சான விளக்கு, சாம்பிராணி பத்தி, தூபம் ஜவ்வாது தூபம், தசாங்கம் தூபம் மற்றும் தெய்வீக மூலிகை சாம்பிராணி பொடி




பசுஞ்சாண விளக்கு நாட்டு பசுவின் சாணம், கோமியம், தயிர் மற்றும் நெய் சேர்த்து தயாரிக்கப்பட்டது

மொத்தமாக கிடைக்கும், கோவில் நிர்வாகிகள், பூஜை பொருள்கள் விற்பனையாளர்கள் அணுகவும்

6382154167



# காசிக்கு இணையாக பிதுர் சாபம் தீர்க்கும் திருப்புவனம்

பிதுர் சாபம் தீர்க்கும் தலமாக சிவகங்கை மாவட்டம்திருப்புவனம் உள்ளது. இங்குள்ள திருப்புவனநாதரை வழிபட்டால் முன்னோர் ஆசியால் குலம் தழைக்கும்.

காசியைச் சேர்ந்த தர்மயக்ஞன் என்பவர் தன் தந்தையின் அஸ்தியுடன் ராமேஸ்வரம் சென்றார். உறவினர் ஒருவரும் அவருடன் வந்தார். வழியில் சிவத்தலமான திருப்புவனத்தில் ஓய்வு எடுத்தனர்.

அப்போது அஸ்தியை பார்த்த உறவினர், அது பூவாக மாறியிருக்க கண்டார். ஆனால் அவர் தர்மயக்ஞனிடம் தெரிவிக்கவில்லை.

ராமேஸ்வரத்தை அடைந்த பின், கலசத்தை திறந்த போது பூக்கள் மீண்டும் அஸ்தியாக இருந்தது. உடனே உறவினர் திருப்புவனத்தில் தான் கண்டதை தெரிவித்தார்.

வியந்த தர்மயக்ஞன் அஸ்தியுடன் மீண்டும் இத்தலத்திற்கு வந்தார். மீண்டும் அஸ்தி பூவாக மாறியது. அதை வைகையாற்றில் கரைத்து விட்டு மோட்ச தீபம் ஏற்றி வழிபட்டார்.

காசியை விட 16 மடங்கு புண்ணியம் மிக்க இங்குள்ள சுவாமி திருப்பூவனநாதர் என்றும், அம்மன் சவுந்திர நாயகி என்றும் அழைக்கின்றனர்.

இங்கு திதி, தர்ப்பணம் செய்தால் முன்னோர்கள் நற்கதி அடைவர். அவர்களின் ஆசியால் குடும்பம் தழைக்கும்.

திருப்புவனத்தில் பொன்னனையாள் என்ற நடனமாது வாழ்ந்தாள். சிவபக்தையான அவள் பூவனநாதருக்கு தங்கச்




ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை
மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்
பீனாஸ் பத்திர எழுத்தகம்
பத்திர எழுத்தர், மானாமதுரை

Prop.N.P.வேல்முருகன் B.Com
State Document Writer
செல்: 99526 39497
95851 88741



சிலை அமைக்க விரும்பினாள். இதை நிறைவேற்ற சித்தர் வடிவில் சிவனே நேரில் வந்தார்.

அவளது வீட்டிலுள்ள செம்பு, ஈயம், பித்தளை பாத்திரங்களை தீயில் இட்டால் பொன்னாக மாறும் என்றும் கூறினார். பொன்னனையாளும் அவ்வாறே செய்து தங்கச்சிலையை உருவாக்கினாள். சிலையின் அழகில் மயங்கி அதன் கன்னத்தை கிள்ளி முத்தமிட்டாள்.

அவளது நகக்குறியை இக்கோயிலில் உள்ள உற்சவர் சிலையில் இப்போதும் காணலாம்.

ஞான சம்பந்தர் இங்கு வந்த போது வைகை ஆறு எங்கும் சிவலிங்கமாக தெரிந்ததால் கால் வைக்க அஞ்சினார். ஆற்றின் மறுகரையில் நின்றபடியே பாடினார். அப்போது சன்னதியில் சிவனை மறைத்து நின்ற நந்தி சற்று விலகியது. அதன்படி இப்போதும் கோயிலில் நந்தி விலகியே உள்ளது.

மதுரை – மானாமதுரை சாலை வழித்தடத்தில் மதுரையில் இருந்து தென்கிழக்கே 20 கி.மி. தொலைவில் திருப்புவனம் உள்ளது.



வாழ்க வளமுடன்
அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

க.சுப்பிரமணியன்
பத்திர எழுத்தர்

செல்:
9443170771
9043170771
மு.முகிலன் பத்திர எழுத்தர்
செல்: 9944834834, 7373595259,
1, வெள்ளாளர் தெரு, மெயின்ரோடு, நெல்முடிக்கடை
திருப்புவனம்


அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் வாடிக்கையாளர் சேவையில் 25 ஆண்டுகள்
Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE
எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.
அருண் ஏஜன்ஸீஸ்
பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்
MAK LUBRICANTS
டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ் சிவகங்கை மாவட்டம்.
Emergency No : 9443274648
1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.
போன் : 04574-264300, 265710
குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட் வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.









# அற்புதங்கள் நிகழ்த்தும் அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம் வேதியேரேந்தல் அருகே வைகை ஆற்று கரையில் உள்ள ஏனாதி செங்கோட்டை கிராமத்தில் இந்துசமய அறநிலையதுறை நிர்வாகத்தில் உள்ள 21பந்தி 61 சேனை கொண்ட

அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. பிரசித்தி பெற்ற இக்கோவில் திருப்பணிகள் செய்யப்பட்டு கடந்த 2017 ஆண்டு வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகம்

நடைபெற்றது. இங்கு நடைபெறும் மாசிமாதம் பத்துநாள் நடைபெறும் மகாசிவராத்திரி விழா வெகுசிறப்பாக நடைபெறும். தமிழகத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வழிபாடு செய்வார்கள். அதை தொடர்ந்து வைகாசி









வருஷாபிஷேகம்

நவராத்திரி விழா நடைபெறும். வாரத்தின் அனைத்து நாட்களிலும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜை நடைபெறுகிறது. கோவிலில் உள்ள பரம்பரை பூசாரி சண்முகசுந்தரம் சுவாமி கூறியதாவது தென்மாவட்டங்களில்

பிரசித்தி பெற்ற ஏனாதி செங்கோட்டை அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் வணங்கும் பக்தர்கள்களுக்கு வேண்டிய வரங்களை வழங்கி பக்தர்கள் வாழ்வில் பல்வேறு அற்புதங்களை நிறைவேற்றி தருவதால் தினமும் ஏராளமான பக்தர்கள் அங்காள பரமேஸ்வரி அம்மனை மனமுருகி வழிபாடு செய்து வருகின்றனர்.







# இராமேஸ்வரம் தரிசனத்தில் முழு பலனைத் தரும்

## ✦ நீலேஸ்வரர் லிங்கம் ✦ உப்பு லிங்கம்

## ✦ சேது மாதவர் ✦ பாதாள பைரவர்

இராமேஸ்வரம் கோவிலில் எவருக்குமே தெரியாத சில அற்புத சக்தி வாய்ந்த சன்னிதிகள் உள்ளது.

ராமேஸ்வரத்தில் பிரகாரங்களில் சுற்றி வரும்போது நிறைய லிங்கங்கள் இருப்பதை பார்த்திருப்பீர்கள்.

இவற்றில் சில லிங்கங்கள் கோவில் நிர்வாகத் தாலும், பக்தர்களாலும் கவனிக்கபடாமல், பூஜைகள் நடைபெறா மலும் இருப்பதையும் பார்த் திருப்பீர்கள்.

அப்படி ஒரு லிங்கம் பல நூறு வருடங்கள் பராமரிப்பு இல் லாமல் தூசி பிடிக்கப்பட்டு, பரா மரிப்பு இல்லாமல் உள்ளது.

மூன்றாம் பிரகாரத்தில் நளன், நீலன், கவன் ஆகியோரால் பூஜிக்கப்பட்ட சிவன் சன்னதி களுக்கு அருகில் உள்ள இந்த லிங்கத்தின் பெயர் நீலேஸ்வரர் லிங்கம்.

இந்த நீலேஸ்வரர் லிங்கத்தின் சிறப்பு என்ன வென்றால் பல நூறு வருடங்களுக்கு முன்பு சீதையால் பிரதிஷ்டை செய்யபட்ட தற்போதுள்ள ராமநாதர் லிங்கத்திற்கு பதிலாக இருந்த மூலவர் லிங்கம் இவர்தான் என கூறப்படுகிறது

இந்த லிங்கத்தை தரிசிப்பதற்குரிய பிராப்தம் இருந்தால் தரிசிக்க முடியும்.

மேலும் ராமேஸ்வரம் கோவிலில் ராமநாதர் சன்னிதிக்கு பின்புறம் உப்புக்கல்லால் செய்யப்பட்ட ஒரு பழமையான லிங்கம் உள்ளது. பல வருடங்களாக அந்த உப்புக்கல்லால் செய்யப்பட்ட உப்புலிங்கம் கரையாமல் அப்படியே உப்புக் கல்லாகவே இருப்பது மிகவும் அதிசயமாகும்.

இந்த லிங்கம் வந்ததற்கு ஒரு கதை கூறப்படுகிறது.

ஒரு முறை சிலர், ராமேஸ்வரம் கோவிலில் உள்ள லிங்கம் மணலால் ஆனது அல்ல என்றும், அப்படி மண லால் செய்யப்பட்டது என்றால், அபிஷேகத்தின் போது கரைந் திருக்க வேண்டும் என்றும் வாதம் செய்தார்கள்.

அந்த நேரத்தில் பாஸ்கரராயர் என்ற அம்பாள் பக்தர், தண்ணீரில் எளிதில் கரையும் தன்மையுடைய உப்பில் ஒரு லிங்கம் செய்து, அதற்கு அபிஷேகம் செய்தார். ஆனால் அந்த லிங்கம் கரையவில்லை. அம்பாளை வணங்கும் தன்னால் பிரதிஷ்டை செய்யபட்ட லிங்கமே கரையாதபோது, காக்கும் கடவுளின் மனைவியான சீதாதேவி பிரதிஷ்டை செய்த லிங்கம் கரையாமல் இருப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது' என்று கூறினார்.

அவர் செய்த உப்பு லிங்கத்தை இப்போதும் நாம் தரிசனம் செய்யலாம். மேலும் இராமேஸ்வரம் கோவிலுக்கு



செல்பவர்கள் அவசியம் சேதுமாதவர் சன்னதியின் மகத் துவத்தை தெரிந்து செல்வது நன்மை தரும்.

காலில்சங்கிலியுடன் காட்சிதரும் பெருமாள்தான் சேது மாதவர், சுந்தரபாண்டியன் என்னும் மன்னன், பெருமாளின் தீவிர பக்தராக விளங்கினான்.

அவனது குழந்தை பாக்கியம் இல்லா குறையைத் தீர்க்க மகாலட்சுமியையே அவரது மகளாக அவதரிக்கும்படி செய்தார் பெருமாள்.

அவள் மணப்பருவம் அடைந்தபோது, பெருமாள் ஒரு இளைஞனின் வடிவில் வந்து அவளிடம் வம்பிழுத்தார்.

மன்னன் அந்த இளைஞனை சிறையில் அடைத்து, சங்கிலியால் காலைக் கட்டிப்போட்டான்.

பக்தனின் பக்திக்கு கட்டுப்பட்ட பெருமாள், அவ்வாறு சங்கிலியால் கட்டுவதற்கு இடமளித்தார்.

அன்றிரவில் மன்னனின் கனவில் இளைஞ னாக வந்து சிறையில் அடைபட்டிருப்பது தானே என்று மன்னனுக்கு உணர்த்தவே, இருவருக்கும் திருமணம் செய்விக்கப்பட்டது.

இளைஞராக வந்த சுவாமி, இங்கு சேதுமாதவராக அருளுகிறார். அவரது காலில் சங்கிலி கட்டப்பட்டிருக்கிறது.

இவரது சன்னதி அருகில் லட்சுமி நாராயணர், யோக நரசிம்மர் இருவரும் அருகருகில் காட்சி தருகின்றனர்.

கடுமையான பிதுர்தோஷம் உள்ளவர்கள் இராமேஸ்வரம் கோவிலில் உள்ள அனைத்து தீர்த்தத்திலும் நீராடிவிட்டு இந்த சேதுமாதவர் சன்னதி முன்பு, கடல் மணலில் லிங்கம் பிடித்து வைத்து தங்கள் கோரிக்கைகளைச்



சொல்லி வணங்கினால் மட்டுமே கடுமையான பிதுர்தோஷத்தை நீங்கும் என்பது எவருக்குமே தெரியாத தேவரகசியமாகும்.

ராமர் இங்கு சிவபூஜை செய்தபோது அவரைப் பிடித்த பிரம்மஹத்தி தோஷம் (கொலை செய்த பாவம்) விலகியது. அந்த தோஷம் எங்கு செல்வதென தெரியாமல் திணறியது. அதனால் வேறு யாருக்கும் பாதிப்பு உண்டாகாமல் இருக்க, சிவன் பைரவரை அனுப்பினார். அவர் பிரம்மஹத்தி தோஷத்தை தன் திருவடியால் அழுத்தி, பாதாளத்தில் தள்ளினார். பின்னர் இத்தலத்திலேயே அமர்ந்து, இங்கு வரும் மனம் திருந்திய பக்தர்களின் கொடிய பாவங் களைப் பாதாளத்துக்குள் தள்ளுபவராக அருள் செய்கிறார். இவருக்கு "பாதாள பைரவர்' என்று பெயர். இவரது சன்னதி கோடிதீர்த்தம் அருகில் உள்ளது.

இராமேஸ்வரம் கோவிலுக்கு செல்பவரகள் பல நூறு வருடங்கள் பழமையான நீலேஸ்வரர் லிங்கம்., உப்புக்கல்லால் செய்யப்பட்ட உப்பு லிங்கம், சேது மாதவர் சன்னிதி மற்றும் பாதாள பைரவர் ஆகிய சன்னிதிகளுக்கு சென்று தரிசித்து முழு பயன்பெறுங்கள் தெரியாதவர்களுக்கு தெரியபடுத்துங்கள்.

# காசியை காக்கும் கால பைரவர்

காசியில் உள்ள கால பைரவர் சன்னதி பிரசித்தி பெற்றது. காசிக்குத் சென்றவர்கள் இரவு கால பைரவ பூஜை பார்க்காமல் திரும்புவதில்லை. கால பைரவர் காசி நகரத்தின் சேனாதிபதி. காசியில் இறந்தவர்களுக்கு யமபயம் கிடையாது.

தண்டனை கொடுக்க யமனுக்கு அதிகாரமும் கிடையாது. காலனின் அதிகாரம் பைரவர்களுக்குக் கிடைத்தால் கால பைரவர் என்று அழைக்கப்படுகிறார்.


பிரம்மாவின் சிரசு கபாலமாக மாறி, பிரமஹத்தி தோஷத் திற்கு பைரவர் சக்தி ஆளாகி முடிவில் காசி மாநகர எல்லையில் கால் வைத்தபோது சிவபெருமான் காட்சி தந்து பிரமஹத்தி தோஷத்தை நீக்கி காசிமாநகர காவல் தெய்வமாக எழுந்தருள அருள்புரிந்தார். இன்றும் காசி மாநகரம் பைரவர் ஆட்சி செய்யும் இடமாக உள்ளது. காசிமாநகர எல்லையில் எட்டு திக்கிலும் அஷ்ட பைரவர்கள் எழுந்தருளி எல்லையை பாதுகாக்கின்றனர்.

காசி அனுமன் காட்டில் உருபைரவர் ரிஷப வாகனத்தில் தென்கிழக்கு மூலையிலும்,ஸ்ரீதுர்க்கை கோவிலில் சண்ட பைரவர் மயில் வாகனத்தில் தெற்கு மூலையிலும், விருத காலர் கோவிலில் அன்ன வாகனத்தில் கிழக்கு மூலையில் அசி தாங்க பைரவரும், லாட் பஜாரில் கபால பைரவர் யானை வாகனத்தில் வடமேற்கு திசையிலும், ஸ்ரீகாமாட்சி ஆலயத்தில் கருட வாகனத்தில் குரோதன பைரவர் தென்மேற்கு திசையிலும், பீமசண்டியில் குதிரை வாகனத்தில் உன்மத்த பைரவர் மேற்கு திசையிலும், திரிலோசன சங்கமத்தில் வடகிழக்கு திசையில் சம்ஹார பைரவர் நாய் வாகனத்திலும், பூத பைரவரத்தில் சிங்க வாகனத்தில் வடக்கு திசையில் பீஷண பைரவர் ஆகிய அஷ்ட பைரவரும் அஷ்ட திக்கிலும் எழுந்தருளி ஆட்சி செய்கின்றார்கள்.



அதனால்தான் காசி மாநகர எல்லையை விட்டு வெளியேறுகின்ற ஒவ்வொரு பொருளும் காசி கால பைரவர் முன் அனுமதி பெற்றே வெளிவர வேண்டும். அதேசமயம் காசியில் யாராவது இறந்தால் யமவர்த் தனை கிடையாது. பைரவ வாதனை நிச்சயம் உண்டு. காசி மாநகர எல்லையை தொடும்போது எமனும் திரும்பி போவார் என்பது ஐதீகம். அதனால்தான் என்னவோ காசி பைரவர் மஹா பைரவர் சன்னதிக்கு தனி சக்தி உள்ளது. காசி கறுப்பு கயிறு எமபயம் நீங்கி வாழ வைக்கின்றது.



# கிரிவலம் செல்லும் முன் வணங்க வேண்டிய மூன்று கோவில்கள்

திருவண்ணாமலையில் கிரிவலம் தொடங்கு வதற்கு முன்பு மூன்று கோயில்களில் உள்ள தெய்வத்திடம் அனுமதி பெற்ற பிறகே கிரிவலத்தை தொடங்க வேண்டும் என்பது நியதி.

திருவண்ணாமலையில் முதன் முதலில் கிரிவலம் சென்றது பார்வதிதேவி ஆவார்.

### 1. பூத நாராயணர் கோயில்

பார்வதி தேவி சிவபெருமானிடம் இடதுபாகத் தை பெருவதர்க்கு பூத நாராயணர் கோயிலில் கற்பூரம் ஏற்றி வழிபட்ட பிறகுதான் கிரிவலத்தை தொடங்கினார்.

பூத நாராயணர்தான் திருவண்ணாமலையின் காவல் தெய்வம். அவரை வணங்கிவிட்டுப் புறப்பட்டால் எந்தவித இடையூறும் இல்லாமல் கிரிவலத்தை முடிக்க முடியும் என்பது நம்பிக்கை.

### 2. இரட்டைப் பிள்ளையார் கோயில்

செவ்வாய் தோசம், ராகு தோசம், பிரம்மஹத்தி தோசம் உள்ளவர்கள் அரசமர இலையில் தீபம் இட்டு வழிபட வேண் டும்.

பார்வதி தேவி பிரம்மஹத்தி தோசம் நீங்கு வதற்கு முதல் கடவுள் இரட்டை பிள்ளையார் கோயிலில் வழிபட்ட பிறகு கிரிவலம் வர தொடங்கினர். கா

### 3. தேரடி முனீஸ்வரர் திருக்கோயில்

மூன்றாவதாக தேரடி முனீஸ்வரர் கோவிலில் வழிபட வேண்டும். அதன் பிறகு ஆலயம் சென்று அண்ணா மலையாரையும், உண்ணாமுலை அம்பிகையையும் தரிசிக்க வேண்டும். பிறகு கோயில் ராஜ கோபுரத்தை வணங்கிவிட்டு மலையை வலம் வரத் தொடங்க வேண்டும்.







aanmeegamalar.com

# உலக தமிழர்களின் தாய்மடி

# கீழடிக்கு வாருங்கள்

## இந்திய அரசின் பாரம்பரிய சுற்றுலா கிராமமாக தேர்வு பெற்ற கீழடி அகழ்வாராய்ச்சி

## அகழ் வைப்பகத்தை காண வாருங்கள்













**தமிழகத்திலேயே ISO தர சான்றிதழ் பெற்ற முதல் ஊராட்சி கீழடி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்**




என்றும் மக்கள் பணியில்

# Er. வெ.வெங்கடசுப்பிரமணியன் B.E.MBA


தலைவர் கீழடி ஊராட்சி மன்றம் சிவகங்கை மாவட்டம்

aanmeegamalar.com

aanmeegamalar.com

# அகில உலகத்தை ஆளும்

# அன்னபூரணியும் தீபாவளி தரிசனமும்



தேவரும் முனிவரும் எப்போதும் தியானிக்கும் கயிலைவாசன், ஏகாந்தமாக தவத்தில் ஆழ்ந்திருந்த சமயம் பார்வதி தேவி விளையாட்டாக அவர் கண்களைப் பொத்தினாள்.

சூரிய, சந்திரர்களை வலது, இடது கண்களாகவும், அக்கினியையே நெற்றிக் கண்ணாகவும் கொண்டவர் சிவபெருமான். தேவி அவர் கண்களைப் பொத்தியதால் சூரிய, சந்திரர்கள் தம் ஒளியிழந்தனர். அதனால் உலகம் இருண்டது.

அனைத்து உயிர்களும் பரமேஸ்வரனை சரணடைந்தனர். அவர் தன் அக்கினிமயமான நெற்றிக் கண்ணைத் திறந்து உலகிற்கு ஒளியைத் தந்தார்.

இவை அனைத்தும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்ததால் பார்வதி தேவி பயந்து உடனே தன் கைகளை ஈசனின் கண்களிலிருந்து எடுத்தாள். கூடவே மனம் கலங்கி அவரிடம் "நான் விளையாட்டாக தங்கள் கண்களை பொத்தியதால் ஏற்பட்ட பாவம் நீங்க என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டும்?" எனக் கேட்டாள்.

"நமக்கு இது கண்ணிமைக்கும் நேரமே என்றாலும் உலக உயிர்களுக்கு அது எவ்வளவு காலம் என்று உனக்குத் தெரியாதா தேவி? ஏன் இந்த குறும்புத்தனம்? ஆனாலும் நீ உலகிற்கெல்லாம் அன்னை. ஆகவே உன்னை ஒரு பாவமும் அணுகாது" என்றார் ஈசன்.

அந்த வார்த்தைகளால் சமாதானமடையாத அம்பிகை பூவுலகில் தவம் செய்து தன் மீது ஏற்பட்ட பாவத்திற்கு பிராயச்சித்தம் தேட முயன்றாள்.

ஈசனின் அனுமதி பெற்று தென் திசை நோக்கி புறப்பட்டாள்.

அந்த சமயம் காசி திருத்தலத்தில் மழையின்றி, கடும் பஞ்சம் நிலவியிருந்தது. மக்கள் பசியினால் துடித்தார்கள்.

தேவி காசியை அடைந்து அங்கு அற்புதமான ஒரு திருக்கோயிலை எழுப்பி அன்னபூரணி எனும் பெயரில் நிலைகொண்டாள். அவள் திருக்கரத்தில் என்றுமே வற்றாத அட்சய பாத்திரம் எனும் அமுதசுரபியும் பொன்னாலான கரண்டியும் இருந்தன. அவள் உயிர்களுக்கு உணவு வழங்க ஆரம்பித்தாள். அதனால் மக்களின் பசிப்பிணி நீங்கியது.

மக்கள் அன்னபூரணியை போற்றிப் புகழ்ந்தனர்.

வாழ்க வளமுடன்
குடும்ப சுற்றுலா மற்றும் அனைத்து ஆன்மிக சிற்றுலா செல்வதற்கும் உங்கள்
ஜீவிகா டிராவல்ஸ்
JEEVIKA TRAVELS

INNOVA CAR & ETIOS CAR AVAILABLE HERE
MANAMADURAI

K.THAVAMANI
தொடர்புக்கு: 9442758530 , 9842963531

D.தனபாலன்
பத்திர எழுத்தர்

பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606
செல்: 98424 09829

## காசியில் எங்கு தங்கலாம்

தமிழகத்தில் இருந்து காசி வரும் பக்தர்களுக்கு வர்த்தக ரீதியிலன்றி தொண்டு எண்ணத்துடன் மூன்று மடங்கள் நீண்ட காலமாக செயல்பட்டு வருகின்றன. இங்கு உள்ள அறைகள் கட்டணம் 300 ரூபாயில் இருந்து 700 ரூபாய் வரையாகும். எந்த மடத்திற்கு செல்வது என்றாலும் முன்கூட்டியே போன் செய்துவிட்டு உங்கள் அறையை உறுதி செய்து கொள்ளவும். காசி மட்டுமின்றி கயா, பிரயாக்ராஜ் உள்ளிட்ட புனித தலங்களுக்கு செல்வதற்கும், முன்னோர்களுக்கு காரியங்கள் செய்வதற்கும் மடத்தைச் சார்ந்தவர்கள் உதவி வருகின்றனர்.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகர சத்திரம் கோடாவ்லியா, வாரணாசி

இங்கு தென்னிந்திய சைவ உணவு வசதி உண்டு. 200 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக பக்தர்களுக்கு சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு வருகிறது. 05422451804, 7311166231

சங்கரமடம் அனுமன்காட், வாரணாசி

0542227 7915, 227 6932, 95546 66612, 95546 66613

தங்கும் அறைகள் மற்றும் தென்னிந்திய உணவு கிடைக்கும்.


ஸ்ரீ குமாரசாமி மடம் சோனார்புரா, கேதார் காட், வாரணாசி

05422454064, 8754605272



## ஆயுள் வேண்டி வணங்க வேண்டிய கோவில்கள்...

அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில்,திருக்கடையூர்,
அருள்மிகு எமனேஸ்வரமுடையார் திருக்கோவில், எமனேஸ்வரம், பரமக்குடி
அருள்மிகு காலகாலேஸ்வரர் திருக்கோவில், கோவில்பாளையம்,
அருள்மிகு சித்திரகுப்தசுவாமி திருக்கோவில், காஞ்சிபுரம்,
அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோவில், வேளச்சேரி,
அருள்மிகு ஸ்ரீலிவனேஸ்வரர் திருக்கோவில். திருப்பைஞ்ஞீலி.
அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோவில், வாஞ்சியம்.






அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# கண்ணுச்சாமி தேவர் காம்ப்ளக்ஸ்

உரிமையாளர் கே.குமரேசன்



மஹால், A/C. Non A/C ரூம்,
வீடு வாடகைக்கு கிடைக்கும்

Ph: 9860844645 / 8208034865 தாயமங்கலம்



# ஸ்ரீ வணங்காமுடி சேம்பர் பிரிக்ஸ்

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எந்திரம் மூலம் தயார் செய்யப்படும் வயர்கட் செங்கல் உற்பத்தியாளர்கள்



தெய்வத்திரு S.திவான்ராஜ்

மதுரை-ராமேஸ்வரம், பைபாஸ் ரோடு மானாமதுரை

செல்: 98424 28626 / 98424 68628



D.வணங்காமுடி B.Arch

# ராமேஸ்வரம் அக்னிதீர்த்த மகிமை


ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோவில் முன்புள்ள கடலை அக்னி தீர்த்தம் என்கிறோம். குளிர்ந்த தண்ணீருடைய கடலுக்கு சுட்டெரிக்கும் அக்னியின் பெயரைச் சூட்ட காரணம் என்ன என்று பார்த்தால் அதன்பின்னணியில் உள்ள வரஆறு நம் கண் முன்வருகிறது. சீதாதேவி ராவணனிடம் போரிட்டு மீட்கப்பட்டபின் தன் மனைவி களங்கமற்றவள் என்பதை நிரூபிக்குமாறு ராமபிரான் கூறினார். சீதாதேவி இதற்காக சற்றும் தயங்கவில்லை.

லட்சுமணனை அழைத்து அக்னி மூட்டச்சொன்னாள். அவன் தயங்கினான்.நாம் அயோத்தியை விட்டு கிளம்பும் போது, உன் தாய் சுமித்திரை சொன்னது நினைவில்லையா! என்னைத் தன்னைப் போல் காக்க வேண்டுமென்று. இப்போது, உன் தாய் ஸ்தானத்தில் இருந்து உத்தரவிடுகிறேன். உம்..தீயை மூட்டு, என்றாள். அவன் வேறு வழியின்றி கட்டைகளை எடுத்து வந்து அடுக்கி தீ மூட்டினான்.ஏ அக்னியே! நான்உன்னுள் இறங்குகிறேன். நான்கற்புடையவள்

என்பதை இத்தனை பேர் முன்னிலையிலும் நிரூபித்துக் காட்டு, என்றாள். கொழுந்து விட்டு எரிந்த அக்னிக்குள் அவள் இறங்கினாள். அக்னி பகவானுக்கு மகாசந் தோஷம். ஏனெனில், சீதை மகாலட்சுமியின் அவதாரம்.

அந்த மகாலட்சுமியின் ஸ்பரிசம் தனக்கு கிடைக்கிறதே என்ற ஆனந்தம். அவன் மனம் குளிர்ந்தான். அந்த ஆனந்தத்தில், அவனது இயற்கை குணமானவெப்பம் குளிராக மாறிவிட்டது. சீதையை கைகளில் தூக்கி வந்து ராமனிடம் கொடுத்து, தர்மபத்தினியான இவளை என்னால் எரிக்க முடியாது. என்றான். அவன் ராமேஸ்வரம் கடற்கரையில் இந்த அற்புதத்தை நிகழ்த்தியதால், அவனது பெயரேகடலுக்கும் அமைந்துவிட்டது. சீதை எப்படி அக்னியில் மூழ்கி தன்னைச் சுத்தமானவளாகக் காட்டினாளோ, அது போல், இங்கு வரும் பக்தர்களும் அக்னி தீர்த்தக் கடலில் மூழ்கி, தங்களைப் பாவமற்றவர்களாக்கிக் கொள்கிறார்கள்.



முருகன் ஜுவல்லரி
154, காமராஜர் சாலை, சாலையூர், இளையான்குடி
04564-299195
98650 84964
96296 40932
தங்க நகை சிறுசேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

BIS 916 HUID
தங்க நகைகள் வெள்ளி கொலுசுகள் கிடைக்கும்.

aanmeegamalar.com

# பரிகார ஸ்தலங்கள்

## திருமணத்தடை நீங்க

- திருச்செந்தூர்,
- திருமணஞ்சேரி,
- காளஹஸ்தி,
- திருப்பதி,
- மாயவரம்,
- மேதா தட்சிணா மூர்த்தி.

## குழந்தை பாக்கியத்திற்கு

- ஆலங்குடி,
- சென்னை திருவுடை அம்மன்,
- இருக்கன்குடி மாரியம்மன்,
- தென்குடித் திட்டை குரு பகவான்.

## மேல் படிப்பில் வெற்றிபெற

- திருப்பதி மூகாம்பிகை அம்மன்,
- திருவொற்றியூர் வடிவுடை அம்மன்.



## வழக்கில் ஜெயிக்க, செய்வினை ஒழிய:

- அனுமந்தபுரம் வீரபத்ர சுவாமி,
- வெக்காளி அம்மன்,
- மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி,
- பண்ணாரி அம்மன்.

## ஆன்மீகத்தில் தெளிவு வர:

- திருவண்ணாமலை,
- திருவாலங் காடு,
- பிள்ளையார்பட்டி,
- மதுரை மீனாட்சி திருவலிதாயம் தட்சிணாமூர்த்தி.

## கடன் பிரச்சனை நீங்க:

- மாங்காடு காமாட்சி,
- மதுரை பாண்டி கோவில்,
- சுசீந்திரம் தாணுலிங்கேஸ்வரர்,
- திருவனந்தபுரம் ஆற்றுகரை அம்மன்.


அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

A.L.S.ராமையாநாடார்-சன்ஸ்




மரம், ஓடு, சிமெண்ட்,
உரம் வியாபாரம்
236, மெயின்ரோடு மானாமதுரை




ஸ்ரீ அருணாட்சி அம்மன் பிரிக்ஸ்



உயர்தர சேம்பர் செங்கல்
தயாரிப்பாளர்கள்

செல்: 9994675130/9443168202
9842468202/04574269905



S.நாகராஜ்
தலைவர்,
வீர அழகர் சாரிட்டபிள் டிரஸ்ட்

S.ராஜேந்திரன்


aanmeegamalar.com

# பன்முகம் கொண்ட காசி

காசி, வாரணாசி, பெனாரஸ் எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் காசிக்கு முகங்களும் நிறைய உண்டு. அது வயதானவர்களுக்கு முக்தி அடையும் ஸ்தலமாகவும், யாத்ரிகர்களுக்கு புனித நகரமாகவும், சுற்றுலாப் பயணிகளுக்கு ஆச்சரியங்கள் அளிக்கும் இடமாகவும் பல்வேறு முகங்களை கொண்டது. மேலும் சமீப காலங்களில், காசியில் வாழும் அகோரிகள் குறித்தும் நிறைய பேருக்கு தெரிந்திருக்கிறது.

**பழமையான நகரம்:** பெனாரஸ் என்றும் காசி என்றும் அழைக்கப்படும் வாரணாசி, தொடர்ச்சியாக மக்களின் வசிப்பிடமாக விளங்கும் உலகின் பழமையான நகரங்களுள் ஒன்றாகும். இங்கு கங்கை நதியில் ஒரு முங்கு முங்கி எழுந்தால் செய்த பாவங்கள் அனைத்திலிருந்தும் விமோச்சனம் கிடைக்கும் என்பது நம்பிக்கையாகும்.

**முக்தியின் கதை:** அசுவமேத யாகம் செய்த சூர்ய வம்சத்தை சேர்ந்த சகரன் எனும் மன்னனின் இறந்துபோன மகன்களுக்கு முக்தி அளிப்பதற்காக கங்கா தேவி பூமியில் பிறப்பெடுத்து கங்கை நதியாக ஓடுவதாக புராணம் கூறுகிறது. அன்றிலிருந்து ஏராளமானோர் கங்கையில் அஸ்தியைக் கரைத்து தங்கள் முன்னோர்களின் ஆன்மாக்களை முக்தியடையச் செய்து வருகின்றனர்.

புனித நீராடல்: கங்கை நதியில் ஒரு முங்கு முங்கி எழுந்தால் செய்த பாவங்கள் அனைத்திலிருந்தும் விமோசனம் கிடைக்கும் என்றும் நம்பப்படுகிறது. யாத்ரீகர்கள் பலர் சூரியோதயத்தின் போதும், சூரிய அஸ்த்தமனத்தின் போதும் இந்நதியில் புனித நீராடுகின்றனர்.

**படித்துறைகள்:** கங்கை நதிக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகள் போன்ற அமைப்பினாலான இந்த படித்துறைகள் பல்வேறு கோயில்களைக் கொண்டு, சமயம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் நடைபெறும்முக்கிய மையமாகத் திகழ்கின்றன. இங்கு மொத்தம் 84 படித்துறைகள் இருக்கின்றன.

**மணிகர்னிகா படித்துறை:** மணிகர்னிகா படித்துறைதாம் வாரணாசியில் இறப்பு சுற்றுலா என்றழைக்கப்படும்காட்சியை வழங்குகிறது. இங்கு திறந்தவெளியில் சிதைமூட்டப் படுவதைக் காண ஏராளமான சுற்றுலாப்பயணிகள் கூடுகின்றனர். கணேசர் கோயில் மற்றும் மஹா விஷ்ணுவின் பாதச்சுவடுகளைக் கொண்டுள்ளகல்பலகையான சர்ன்படுகா ஆகியவை இதன் அருகில் அமையப் பெற்றுள்ளன.

**கியூவில் நிற்கும் பிணங்கள்:** மணிகர்னிகா படித்துறையில் சில நேரம் பிணங்கள் அதிகமாக எரியூட்டப்பட இருக்கின்ற சந்தர்பத்தில் வரிசையில் நின்று காத்திருக்க வேண்டும். இறந்த பின்பும் கியூவில் நிற்கும் அவலத்தை என்னவென்று சொல்வது?!

**தசாஸ்வமேத் படித்துறை:** வாரணாசியில் கங்கைக்கரை யோரத்தில் அமைந்துள்ள



aanmeegamalar.com

படித்துறைகளுள் தசாஸ்வமேத் படித்துறை தான் மிகப் பழமையான, கம்பீரமான படித் துறையாகும். இதன் வரலாறு ஆயிரக்கணக்கான வருடங் களுக்குப் பிந்தையதாகும்.

**தர்பங்கா படித்துறை:**தசாஸ்வமேத் மற்றும் ராணா மஹால் ஆகிய படித்துறைகளுக்கு இடையே அமைந்துள்ள தர்பங்கா தொடர் ராஜ குடும்பத்தின் பெயரிலேயே வழங் கப்பட்டு வருகிறது. இப்படித்துறை தவிர்த்து, நதியின் கரையோரத்தில் நிகழும் சடங்குகள் மற்றும் இதர சம்பிர தாயங்களை ராஜ குடும் பத்தினர் கண்ணுறும் வகையில் 1900 களில், ஒரு பிரம் மாண்டமான அரண்மனை, ராஜ குடும்பத்தினரால் இங்கு நிர்மாணிக்கப்பட்டது.

**மால்வியா பாலம்:** வாரணாசியில் கங்கை நதிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள மால்வியா பாலம் டஃப்ஃபரின் பாலம் என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. 1887ஆம் ஆண்டே கட்டப்பட்ட இந்தப் பாலம் ஒரு இரண்டடுக்கு பாலம் என்பது கூடுதல் சிறப்பு. அதாவது கீழ் தளத்தில் ரயில் செல்லும்படியாகவும், மேல் தளத்தில் மற்ற வாகனங்கள் செல்லும்படியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தேவ் தீபாவளி:** தீபாவளி பண்டிகையை அடுத்து கார்த் திகை மாதத்தின் பௌர்ணமி தினத்தன்று தேவ் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தின் போது வானிலிருந்து கடவுளர்கள் எல்லாம் பூமிக்கு இறங்கி வந்து கங்கையில் நீராடுவதாக புராண நம்பிக்கை சொல்கிறது. இதில் கலந்துகொள்வதற்காக உலகம் முழுவதுமிருந்து ஏராளமான பக்தர்களும், பயணிகளும் வாரணாசியில் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் குழுமுகிறார்கள்.

**கங்கா ஆர்த்தி:** காசி விஸ்வநாதர் கோயிலுக்கு



அருகில் உள்ள தசஸ்வமேத் படித்துறையில் ஒவ்வொரு நாளும் சூரிய அஸ்த்தமனத்தின் போது கங்கா ஆர்த்தி நடைபெறும். ஆனால் தேவ் தீபாவளி அன்று நடக்கும் மகா ஆர்த்தி வெகு விசேஷமாக ஆயிரக்கணக்கான பயணிகள் மற்றும் பக்தர்கள் மத்தியில் கொண்டாடப்படுகிறது.

**கார்த்திகை ஸ்நானம்:** தமிழ்நாட்டில் பெரும்பாலானவீடு களில் தீபாவளி அன்று தலைக்கு எண்ணை வைத்து கங்கா தீர்த்தத்தை குளியல் நீரில் கலந்து குளிப்ப வழக்கமாக இருக்கிறது. அதேபோல கார்த்திகைமாதத்தின் பௌர்ணமி தினத்தன்று தேவ் தீபாவளி கொண்டாடும்போது காசியில் உள்ள கங்கை நீரில் நீராடுவர்.

**ஆற்றில் மிதக்கவிடப்படும் அகல் விளக்குகள் :**

நம்ம ஊர் திருவிழாக்களில் எலுமிச்சை பழத்தில் விளக்கேற்றி ஆற்றில் விடும் கட்சியை நம்மில் சிலர் பார்த்திருக்கலாம். அதேபோலத்தான் காசியிலும் தேவ் தீபாவளி பண்டிகையின் போது ஆயிரக்கணக்கான அகல் விளக்குகள் கங்கை நதியில் மிதக்கவிடப்படுகின்றன.






# தினமும் இராமேஸ்வரம் வந்து செல்லும் பூரி ஜெகன்நாதர்

❖ ஸ்ரீ பூரி ஜெகன்நாதர் கோவிலில் குடிகொண்டிருக்கும் விஷ்ணு பகவான், தினமும் காலையில் எழுந்து ராமேஸ்வரம் சென்று விட்டு, மதிய உணவுக்கு மீண்டும் இந்த பூரி ஜெகந்நாதர் ஆலயத்துக்கு வந்துவிடுவதாக ஒரு ஐதீகம் உண்டு.

❖ அதனால் தினந்தோறும் இந்த கோவிலில் இறைவனுக்காக விருந்து மிகவும் தடபுடலாக செய்யப்படுகிறது.

❖ இந்த விருந்து சமைக்கும் முறையே சற்று வித்தியாசமானது.

❖ கோயிலின் சமையலறை உலகிலேயே மிகப் பெரியது, பாரம்பரியம் மிக்கது.

❖ 56 வகையான சைவ உணவுகள் வெங்காயம், பூண்டு இல்லாமல் தயாரிக்கப்படுகின்றன.

❖ கங்கா மற்றும் யமுனை எனப்படும் சமைய லறைக்கு அருகில் உள்ள இரண்டு தீர்த்தக் கிணறுகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீ ரைப் பயன்படுத்தி மண் பானைகளில் மட்டுமே சமையல் செய்யப்படுகிறது

❖ இந்த கோவிலின் சமையலறையில் ஒன்றன் மேல் ஒன்றாக ஏழு மண் பாத்திரங்கள்அடுக்கப் பட்டு விறகு அடுப்பில் உணவு சமைப்பார்கள் அப்படி சமைக்கும் போது அடியில் உள்ள பானையில் உணவு வேகும் முன் மேலே உச்சியில் உள்ள முதல் பானையில் உணவு வெந்து விடும் அதிசயம் நடக்கிறது.

❖ தினந்தோறும் சமைத்த பின் மண்பானைகள் உடைத்து விடுவார்கள். தினம் தினம் புதுபானை சமையலுக்கு பயன்படுத்தபடுகிறது.

❖ இந்த கோவிலின் உள்ளே சமைக்கப்படும் உணவின் அளவு வருடத்தின் அனைத்து நாட்களிலும் ஒரே அளவாகவே இருக்கும். ஆனால் வருகின்ற பக்தர்கள் எண்ணிக்கை இரண்டு லட்சமானாலும் சரி இருபது லட்ச மானாலும் சரி சமைக்கப்பட்ட உணவு அனைவருக்கும் சாப்பிட கிடைக்கும்.

❖ கோவில் சமையலறைகளில் அனைத்து மகா பிரசாத் சமையல்களும் பேரரசின் மகாராஷ்மி தேவியால்மேற்பார்வையிடப் படுகின்றன என்று பாரம்பரியம் கூறுகிறது

❖ தயாரிக்கப்பட்ட உணவில் ஏதேனும் தவறு இருந்தால், கோவில் சமையலறைக்கு அருகில் ஒரு நிழல்நாய்தோன்றுகிறது, இது அவளது அதிருப்தியின் அறிகுறியாகும். நிழல் நாய் காணப்பட்டால், உணவு உடனடியாக புதைக்கப்பட்டு புதிய தொகுதிசமைக்கப்படுகிறது.

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
R.இளையபெருமாள்
I.ஜெகதா
Cell: 9566129076
9566085667
044-35935015

ஆலயம்மன்
அடகு கடை
தங்கம் வெள்ளி அடகு வைக்கப்படும்
மிக குறைந்த வட்டி 1.5% To 2%


4/4 வரதராஜபுரம் மெயின் ரோடு, வீனஸ் காலனி,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018
aanmeegamalar.com

# தலையெழுத்தை மாற்றும் திருப்பாட்டூர் ஸ்தல அதிசயங்கள்

- சிவ பக்தியுடன் வாழ்ந்து வந்த வியாக்ரபாதர், சிவபெருமானை நோக்கி இந்த தலத்தில் தவம் செய்தார்.
- திருச்சியில் உள்ள புகழ்பெற்ற தலம் திருப்பட்டூர் திருத்தலம் ஒரு காலத்தில் மிகச் செழிப்பாக இருந்தது. எப்போதும் வேத கோஷங்கள் காற்றில் நிரம்பி புண்ணிய பூமியாக திகழ்ந்தது.
- இத்தலத்தில் உள்ள தீர்த்தக்குளத்து நீரை, எவர் கையில் எடுத்தாலும் அவர்களுக்கு கங்கையில் நீராடிய பலனும் கிடைக்கும்.
- இத்தலத்தில் 3001 அந்தணர்கள் வேதங்களை அனுதினமும் பாராயணம் செய்ததால் அதில் உண்டான அதிர்வலைகள் அங்கிங்கெனாதபடி எங்குமாக பரவிக் கிடப்பதால் திருப்பிடவூர் எனப்பெயர்பெற்றது. திருப்பிடவூர் என்பதே காலப்போக்கில் திருப்பட்டூராக மாறியது.
- இது காசிக்கு நிகரான தலம் மட்டுமல்ல. திருக்கைலாயத்திற்கு நிகரான தலமும் ஆகும். இத்தலத்தில் ஸ்ரீமந் நாராயணரை வணங்கி தொழுததால் ஆதிசேஷன் அடுத்த கணம் பதஞ்சலி முனிவராக மாறினார்.
- கர்வத்தை ஒழிப்பவர்கள் மனதில் இறைவன் உறைவதும், அவனே இறைவனாக மாறிப்போவதும் இத்தலத்தில் நிகழும்.
- திருக்கயிலாய ஞான உலா எனும் நூல் இத்தலத்தில் அரங்கேறியது.
- சிவ பெருமான், தன் அடியவர்கள் பலரையும் இந்த தலத்திற்கு அழைத்து வந்து திருவிளையாடலை நிகழ்த்தி இருக்கிறார்.
- சேர மன்னன் நாயானாரும், சுந்தரரும் நெகிழ்ந்து வணங்கிப் பேறு பெற்ற அற்புதமான இடம் இதுவாகும். மாசாத்தனார் ஓலை நறுக்குகளுடன் காட்சி தரும் விக்கிரகத் திருமேனியை கோவிலின் மூலமூர்த்தமாக இன்றைக்கும் இங்கு தரிசிக்கலாம்.
- சிவபெருமான் பிரம்மனின் ஒரு தலையை கிள்ளி எறிந்த தலம் திருவையாறு அருகில் உள்ள திருக்கண்டியூர் தலத்திலாகும். அந்த பிரம்மன் பரிகாரம் தேடி கொண்டது திருப்பட்டூராகும்.
- பிரம்மன் உருவாக்கிய பிரம்ம தீர்த்தக் குளம், சிவலிங்கச் சந்நிதிகளும் இங்கு அமைந்துள்ளன. இங்கு வழிபட்டால் 12 சிவாலயங்களுக்கு சென்று வழிபட்ட புண்ணியம் கிடைக்கும்.
- பிரம்மபுரீஸ்வரர் கோவிலில் மாதாவாக பிரம்ம சம்பத்கவுரி கனிவு ததும்ப கருணை பொங்கக் காட்சி தருகிறாள். இவளுக்கு செவ்வாய், வெள்ளி கிழமைகளில் புடவை சார்த்தி வேண்டிக் கொண்டால் தடைப்பட்ட திருமணம் இனிதே நடைபெறும்.
- பிரதோஷ நாளில் இங்கு ஒரே நேரத்தில் நந்திக்குச் செய்யப்படுகிற பூஜையையும், நரசிம்ம மூர்த்தியையும் தரிசிக்கலாம்.
- ஏழேழு ஜென்ம பாவங்களை நீக்கி பஞ்சபூதங்களாக உறைந்து இத்தலத்து ஈசன் நம்மை காக்கிறார்.
- பிரம்மாவை வணங் கும் போதே குரு தட்சிணாமூர்த்தியை தரிசிக்கலாம்.
- குரு பகவானுக்கு அதிதேவதையான பிரம்மா தனி







aanmeegamalar.com




சந்நிதியுடன் திகழும் தலம் இதுவாகும்.

- இத்தலத்திற்கு திருப்படையூர் என்ற பெயரும் வழக்கத்தில் இருந்தது.
- சுப்ரமணிய சுவாமிக்கு வஸ்திரம் சார்த்தி, சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் செய்து பிரார்த்தனை செய்தால் வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும்.
- தலை எழுத்தையே மாற்றி அருளும் திருப்பட்டூரில் குடி கொண்டிருக்கும் சுப்ரமணியரை வணங்கினால் மோட்சம் நிச்சயம் கிடைக்கும்.
- தேய்பிறை அஷ்டமி யில், ராகு கால வேளையில் காலபைரவரைத் தரிசித்து அவரின் வலது காதில் நம் பிரச்சினைகளைச் சொல்லி வணங்கு வதற்காகத்தான் இத்தலத்தில் கால பைரவரின் வலது காது வித்தியாசமாக உள்ளது.
- இத்தலத்தில் கால பைரவருக்கு நேர் எதிரில் இருக்கும் கஜலட்சுமியை வணங்கினால் ஐஸ்வர்யம் கிடைக்கும்.
- 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை திருச்சி, முசிறி மற்றும் துறையூர் என சுற்று வட்டார ஊர்களைச் சேர்ந்தவர்களுக்குக்கூட திருப்பட்டூர் என்கிற ஊரே தெரியாமல் இருந்தது. ஆனால் இன்றைக்கு இத்தலம் தமிழகத்தையும் கடந்த பெங்களூரு, ஆந்திரா முதலான மாநிலங்களையும் தாண்டி பிரபலமாகியுள்ளது.
- இத்தலத்திற்கு வந்து காசி விஸ்வநாதரையும், பிரம்மபுரீஸ்வரரையும் கண்ணாரத் தரிசித்து வணங்குபவர்களுக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். புதிய சக்தியுடன் சிவத்தொண்டு புரிவர்.
- பூணூல் கல்யாணம் எனும் சடங்கை இத்தலத்தில் செய்வது விசேஷம் ஆகும்.
- திருபட்டூர் சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் இங்கு வந்து அம்பாளின் திருவடியில் விதை நெல்லை வைத்து வணங்கி விட்டு, பிறகு அதை ஊர்வலமாக எடுத்துச்சென்று தங்களின் வயல்களில் விதைத்தால், தானியங்கள் செழிப்பாக வளர்ந்து லாபம் கொழிக்கும் என்கிறார்கள்.
- இத்தலத்துக்கு வந்து பிரம்மாவின் திருச்சந்நிதியில் ஜாதகத்தை வைத்து மனதாரப் பிரார்த்திக்கும் பக்தர்கள், பிரார்த்தனை நிறைவேறியதும் வஸ்திரம் சாத்தி நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர்.
- 11 வியாழக்கிழமை தவறாமல் இங்கு வந்து தியானம் செய்தால் மன அமைதி கிடைக்கும் என்கிறார் இங்கு வரும் பக்தர் ஒருவர்.
- வெள்ளைத் தாமரை சார்த்தி பிரம்மாவை வழிபட்டால் உடனடி பலன் கிடைக்கும் அதே போல் நீங்கள் பிறந்த நட்சத்திர நாளில் இத்தலத்தில் வழிபட்டால் புண்ணியம் நிச்சயம் சேரும்.
- ஆடி சுவாதி நட்சத்திர நாளில், திருப்பட்டூர் வந்து மூன்று கோவில்களுக்கு சென்று தரிசனம் செய்யுங்கள். அப்படி தரிசித்த பலனை, அடுத்தடுத்த நாளிலேயே உணர்வீர்கள்.
- ஒரேயரு முறை திருப்பட்டூர் தலத்தில் காலடி எடுத்து வையுங்கள். மனதின் அத்தனை துக்கங்களும் பறந்து, மனம், புத்தி, செயல், சிந்தனை யாவற்றிலும் ஓர் ஒழுங்கை, நேர்த்தியை, தெளிவை உணர்வீர்கள்





aanmeegamalar.com



# மதுரையில் ஸ்ரீ மஹா பெரியவா ஆலயம்

## திருப்பணியில் பங்கெடுக்க ஆன்மிக அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!



காஞ்சி ஸ்ரீ மகா பெரியவா...! கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக பலரால் போற்றப்படுகிறவர். கருணைக்கடலான ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், பாரததேசம் முழுதும் புண்ணிய யாத்திரைகள் மேற்கொண்டு முகாமிட்டு அருளாசிகளை வழங்கியுள்ளார்.

மீனாட்சிசொக்கநாதர் கோயில் கும்பாபிஷேகம் உள்ளிட்ட வைபவங்களுக்காகவும் மதுரைக்கு பலமுறை விஜயம் புரிந்துள்ளார். அவருக்கு மதுரையின் புண்ணிய திருத்தலமான 'வ்ருஷபாத்ரி' எனப்படும் 'திருமாலிருஞ்சோலை' கள்ளழகர் கோயில் மலை அடிவாரத்தில் திருக்கோயிலை அமைக்க இருக்கிறது 'மதுரை அனுஷத்தின் அனுக்கிரகம்'.

கள்ளழகர் திருக்கோயிலின் தீர்த்தக்குளம் அமைந்துள்ள பொய்கைக்கரைப்பட்டியில் இயற்கை எழில் சூழ பொலிவுற அமையவிருக்கிறது இந்தக் கோயில். இதற்கான பூர்வாங்கப் பணிகள் வெகு விரைவாக தொடங்கப்பட இருக்கின்றன. மதுரை எஸ்.எஸ். காலனியில், ஸ்ரீ காஞ்சி மகாபெரியவா கிருஹம் என்னும் கோயிலை நிர்வகித்து நடத்திவரும் அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு அவர்களின் சீரிய முயற்சியில் இந்தக் கோயில் அமையவிருக்கிறது.

இந்தப் புனிதத் திருப்பணியில் ஆன்மிக அன்பர்களும், ஸ்ரீ காஞ்சி மகா பெரியவரின் பக்தர்களும் பங்களிப்பு செய்து அவரது அருளாசியைப் பெறலாம்.

அடுத்த ஒரு ஆண்டுக்குள் இந்தக் கோயில் கட்டுமானம் பூர்த்தி பெற்று ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருள் ஆசியோடு கும்பாபிஷேகம் செய்யப்பட இருக்கிறது. அவரது அருளாசியைப் பெற்ற பக்தர்கள், இந்த திருப்பணியில் பங்கு பெறும் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அன்போடு அழைக்கின்றோம்!



காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகளிடம், மதுரை அழகர்கோவில் அருகே மலை அடிவாரத்தில் பொய்கைக் கரைப்பட்டியில் அமைய உள்ள காஞ்சி ஸ்ரீமகா பெரியவா கோயில் கட்டுமான பணிகள் குறித்து, மதுரை அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு தெரிவித்து ஆசி பெற்ற போது எடுத்த படம்.



காஞ்சி மடத்தின் சேவா ரத்னா விருது



**Rtn. நெல்லை பாலு,** நிறுவனர்
அனுஷத்தின் அனுக்கிரகம், மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்
G 102, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை – 16.
G Pay PhonePe **94426 30815**

**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
**A/C No: 110031396472**
IFS CODE : CNRB0001010 , MICR CODE : 625015006

**நன்கொடையை பணமாகத் தருவது மட்டுமின்றி கட்டிட தளவாட சாமான்கள், இதர பொருட்களாக வாங்கிக் கொடுத்தும் திருப்பணியில் பங்கெடுக்கலாம். கோயில் அமையவிருக்கிற இடம் மற்றும் அங்குள்ள கட்டுமானத்தைச் சேர்த்து சதுர அடி ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரத்து 500 ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. அன்பர்கள் சதுரடி வீதமாக 3,500 அல்லது 2 சதுர அடி, 5 சதுர அடி, 10 சதுர அடி என தாங்கள் விரும்பும் அளவுகளில் அதற்கான தொகையினை MO or Cheque மூலம் தந்தும் திருப்பணியில் பங்கெடுக்கலாம். இந்த கோயில் அமைவதற்கான செலவுகள் பல லட்சங்களை தொடுவதால் ரூ. 1 லட்சம் மற்றும் அதற்கு மேல் பங்களிப்பு செய்யும் நன்கொடையாளர்களின் பெயர்கள் கோயில் கல்வெட்டிலும் பொறிக்கப்பட இருக்கிறது.**

aanmeegamalar.com




aanmeegamalar.com